# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969



மே - ஜூன் 2001 - 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மே - ஜூன் - 2001

மலர் 33 ❄ இதழ் 04

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
**P. O. BOX - 44**
**BATTICALOA. 30000**
**Tel: 065 - 22723**

விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 160/=
(தபாற்செலவு உட்பட)




## உள்ளே


| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு..... | - 01 |
| பூமிக்கு வந்த நிலா | - 02 |
| நம்பிக்கை | - 03 |
| இலக்கிய மஞ்சரி | - 05 |
| கொலைகள் பலவிதம் | - 06 |
| ஆட்டுத்தோல் போர்த்திய... | - 07 |
| புயல் மையம் | - 10 |
| மாதாவின் மகத்துவம் | - 12 |
| சமாதான நகர்வுகள் | - 13 |
| திருச்சபைச் செய்திகள் | - 14 |
| கிறிஸ்தவ அடிப்படை .... | - 16 |
| தேசிய பொது நிலையினர் | - 18 |
| மாணவர் பக்கம் | - 21 |
| புலம் பெயர்ந்த புண்ணிய.. | - 23 |
| 35வது உலகத் தொடர்பு... | - 24 |


### தொண்டன் சஞ்சிகை நடாத்தும் சிறுகதைப் போட்டி

**கல்முனைப் பிராந்திய எழுத்தாளர்களுக்கு மட்டும்**

* சமகால வாழ்வியற் பிரச்சனைகளைக் கருவாகக் கொண்டிருக்க வேண்டும்.
* கையெழுத்தில் – முழுத்தாளில் மூன்று முதல் நான்கு பக்கங்களுக்குள்
* தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதப்பட வேண்டும்.
* பெயர், முகவரி தனியாக எழுதி இணைக்கப்பட வேண்டும்.
* முடிவுத் திகதி : 25 ஜூன் 2001.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு............

வைகாசு பொறந்தாச்சு,
மரியன்னையின், வணக்கமாதம்
நினைவாச்சு செபமாலை ஓதுங்கள் என
சாமிமார் சத்தம் வச்சாச்சு.

குடும்ப செபமாலை
குடும்பத்தை குலைக்காது
அனுபவ மொழி மட்டுமல்ல
அது ஓர் அருள் மொழியும்

செபமாலையை விட்டெறியுங்கள்
மாதாவின் சுருபத்தை உடைத்தெறியுங்கள்
அன்னை தேவையற்றவள்
அடுத்தவரின் பரிந்துரை தேவையற்றது
ஆண்டவரிடம் நேராகப் போகலாம்
என்ற கோஷங்களும், குழப்பங்களும்
ஆங்காங்கே ஒலித்துக் கொண்டிருக்க

வைகாசி மாதத்தை வணக்க மாதமாக்கி
மாலை தோறும் செபமாலை, பிரார்த்தனை
சொல்லி வருகின்ற
கத்தோலிக்க திருச்சபை
பக்தர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்

அன்னைமீது வீம்பு பேசுகின்ற சிலர்
அன்று அன்னை மீது அன்புவைத்த பக்தர்கள்
ஆனால்,
அன்னை மீது ஆழமில்லாத பக்தியும்,
இறைவார்த்தையில் ஆழமில்லாத
அறிவும்,குழப்பங்களை குவலயத்தில்
ஏற்படுத்துகின்றன.


"அருள் நிறைந்தவளே வாழ்க" என்று
நான் அன்னையைப் பார்த்து
சொல்லக்கூடாதா, கூடாதென்றால்
கபிரியேல் தூதன் சொன்னது பொய்யா?
இறைவார்த்தையை எடுத்து
செபமாக்குவது தப்பா?

பிறதர் (சிஸ்டர்) எனக்காக யேசுவிடம்
செபியுங்க
என்று கேட்டால் அது தப்பா
அது தப்பில்லாத போது
அன்னையே எனக்காக யேசுவிடம்
செபியுங்க என்று கேட்பது மட்டும்
எப்படி தப்பாகின்றது

கபிரியல் தூதன் வாழ்த்தியவரை
நாங்கள் வாழ்த்துவதும் தப்பல்ல
அன்னை எங்களுக்காக இயேசுவை
மன்றாடுங்கள்
என்று கேட்பதும் தவறுமல்ல,
இறைவார்த்தைக்கு
வெளிச்சமும், விளக்கமும் தருவது
திருச்சபையே தவிர
தனிமனிதர்களல்ல
திருச்சபை காலாகாலமாக
கையாண்டு கற்பித்துவந்த
மாதா பக்தியை
எந்த விதத்திலும் நாம்
கைவிட முடியாது. கைவிடப்
போவதுமில்லை.

*ஆசிரியர்.*

## இறைவாக்கு



எல்லாத் தலைமுறையினரும் என்னைப்
பேறு பெற்றவர் என்பர்

(லூக் 1/48)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்கு வந்த நிலா

-பெனி-

பூமிக்கு வந்த நிலா
புனிதையாய் வாழ்ந்த நிலா
சாமிக்குத் தாயாக
தன்னையே தந்த நிலா!

✦✦✦

கன்னியாய் வாழ்ந்த நிலா
கடவுளின் தூதன் வந்து
'பெண்ணவளே வாழ்க' சொல்ல
பேதலித்து நின்ற நிலா!

✦✦✦

இறைவனின் மகனே
கருத்தரிப்பாய் என்றவுடன்
அறியாமல் கணவனை
ஆகுமோ என்ற நிலா!

✦✦✦

ஏழைப் பெண் ஆனாலும்
கோழையில்லா கோதை நிலா
ஆண்டவனின் தூதனையே
தட்டிக் கேட்டத் தாமை நிலா!

✦✦✦

ஆண்டவனால் முடியாதது
அகிலத்தில் ஒன்றுமில்லை
சொன்னவுடன் தூதனவன்
பாதத்தில் வீழ்ந்த நிலா!

✦✦✦

மாசில்லாமல் உற்பவித்த
மன்னவனின் அன்னை நிலா
தூசு கொண்ட உள்ளங்களை
துடைத் தணைக்கும் தூய நிலா!



கானாவூர் சென்ற நிலா
கல்யாணம் பார்த்த நிலா
தானாக முன் வந்து
தன் மகனைக் கேட்ட நிலா!

✦✦✦

விண்ணேற்றம் கண்ட நிலா
வீரமாய் வாழ்ந்த நிலா
மண்ணுலகின் மானிடர்க்காய்
மகனோடு பேசும் நிலா!

✦✦✦


வார்த்தையைக் கருத்தாங்கி
வளர்த்தெடுத்த வல்ல நிலா
பார்த்ததையெல்லாம் தியானித்த
பக்தியுள்ள பாச நிலா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

ஆனந்தா A. G. ராஜேந்திரம்



நாள் ஒன்று புலருகிறது
பொழுது ஒன்று மலருகிறது

படுக்கையை விட்டு எழும்பும்போது கூடவே மனதில் அச்சமும் வந்து ஒட்டிக் கொள்ளுகிறது. இன்றைய நாள் எனக்காக எதை வைத்துக் காத்திருக்கிறதோ என்ற பயம் மனதை வாட்டவே செய்கிறது.

எதுவும் எமக்கு நன்மையாகவே அமைய வேண்டும் என்று சிந்தித்தே பழக்கப் பட்டு விட்டவர்கள் நாங்கள்!

எனவே இன்றும் எமக்கு நன்மையே அன்றி வேறெதையும் கேட்கப்போவதில்லை. நல்லதைச் சிந்தித்து வாழ்தல் என்பது ஒன்றும் தப்பானதல்ல.

ஆனாலும் நம்மைப் பொறுத்தவரை எங்கும்எதிலும் எப்போதும் நன்மையையேயன்றி வேறொன்றும் வேண்டாம் என்று எண்ணுவதில் தான் நாம் தவறு விடுகின்றோம். நன்மையைத் தவிர வேறொன்றும் வேண்டாம் பராபரமே என்று இறைவனை வலிந்து நிற்பதில்தான் நாம் சறுக்கி விடுகின்றோம்.

இன்பமும் துன்பமும் வாழ்க்கை எனும் நாணயத்தின் இரு பக்கங்கள். ஒன்று இல்லாத நிலையில் வாழ்க்கை சுகப்படவே மாட்டாது. இறைவனின் மகிமை வெளிப்படவே மாட்டாது.

இன்பத்துக்குரியவைகள் பிறருடன் பகிர்ந்து கொள்ளப்படும்போது இரட்டிப் பாகின் றன. துன்பத்துக்குரியவைகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும்போது அவை பாதியாகக் குறைந்து விடுகின்றன என்பார்கள். நம்மைப் பொறுத்தவரையில் இன்பமோ, துன்பமோ எது வரினும் பெரும்பாலும் மற்றவருடன் பகிர்ந்து கொள்வது குறைவுதான். பல சந்தர்ப்பங்களில் இது அரிதான காரியமாகவே இருக்கின்றது. நல்லவைகள் ஒளியைப் போன்றவை அவை அதைப் பெற்றுக்கொள்ளுகின்ற தனி மனிதரை மட்டுமல்ல சுற்றியுள்ள சகலரையும் பற்றிக் கொள்ளுகிறது.

ஒளியை ஏற்றி வைக்கும்போது அது சுற்றிலும் உள்ளவைகளையும் ஒளியூட்டுவதன் மூலம் இரட்டிக்கிறது. இருளோ அனைத்தை யும் தன்வயமாக்கிக் கொள்ளுகிறது. விழுங்கிக் கொள்ளுகிறது. நம்மையும் அது இழக்கவைத்து விடுகிறது. நம்மிலேயே நாம் குறைந்து விடு கிறோம்.

எதையும் ஏற்றுக் கொள்ளும், அதுவும் சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் தான் வருபவைகளை ஏற்றுக் கொள்ளவும் அதைத் தக்கபடி பிறருடன்பகிர்ந்து கொள்ளுகின்ற மனநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஞானம்

பல நூல்களைப் படித்தவன் பண்டிதனாக மட்டும் ஆக முடியும். உன்னைப் பற்றி ஆராய்ந்தால் நீ ஞானியா கலாம். கல்வி ஞானம் என்பது பிறர் நூல்களைக் கரைத்துக் குடிப்பதல்ல அவற்றைத் தன் சிந்தனை கொண்டு அலசி முடிவெடுப்பதே.

உருவாகவும் வழி செய்கின்றது. நடப்பவை யெல்லாம் நமக்கு நன்மையாகத்தான் இருக்க வேண்டும் என்ற நினைப்பில் சுயநலமே நிரம்பிக் கிடக்கின்றது. நமக்கு மட்டும் நன்மை யென் றால் நம்மைப் போன்று அன்பு செய்யப்பட வேண்டிய நம் அயலானுக்கு மட்டுதான் தீமையா? நன்மையோ தீமையோ, இன்பமோ துன்பமோ எது கடவுள் சித்தமோ அதையே கேட்டு நிற்கின்ற பண்பு எம்மில் நிறைய வர வேண்டும். நாம் நினைப்பவைதான் நடக்க வேண்டும் என்ற நிலைப் பாடு சரியானதென்றால் இறைவனே வேலையில் லாமல் திண்டாட வேண்டியதுதான். வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்து வாழும் ஒரு வனின் வாழ்வு அனுபவம் என்கிற செல்வத்தால் நிறைவு பெறுகின்றது என்பதை சிந்தித்துப் பார்க்க நாம் தவறக் கூடாது.

பெரும்பாலும், நமது எண்ணப்படி நமது வாழ்க்கை சந்தோஷமாக, சீராகப் போய்க் கொண்டி ருக்குமானால் நாம் இறைவனை மனதில் எண்ணியும் பார்ப்பதில்லை. மாறாகத் துன்பங்கள் எம்மை வாட்டும்போதெல்லாம் முதலில் தெய்வத் திடம் தான் முறையிடுகின்றோம். துன்பமும், கண்ணீரும் எம்மைக் கடவுளை நோக்கிக் கொண்டு செல்லும் படகுகள் போன்றவை. தக்கபடி அவை களைக் கையாளாது போனால் நம்மைக் கரை சேர்க்கவைப்பதை விடுத்து மூழ்கடிக்க வைத்து விடும்.

எனவே இறைவனிடம் நாம் கேட்கக் கூடிய தெல்லாம். இறைவா இன்றைய நாள் நல்ல நாளாக அமையட்டும். எனக்கு கிடைப்பவைகள் இன்பமோ, துன்பமோ அதை ஏற்றுக் கொள்ளும் மனத்திடத்தை எனக்கு தரவேண்டும். எனது பாதையில் துணை நீரே வரவேண்டும், என் வாழ்வைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் இன்பங்களை இரட்டிப்பாக்கித் துன்பங் களை பாதியாக்கி என்சுமையைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதுவாகத்தான் இருக்க முடியும்.

சங்கீதம் 91:15ல் சொல்லப்படுவது போன்று என்னை அழைக்கின்றபோது, நான் பதில் கொடுப்பேன், துன்ப வேளைகளில் நான் அவர் கள் கூடவே இருப்பேன் என்று வாக்கு அளிக் கும் நம் இறைவன் எமது குரலுக்குச் செவி மடுக்க எந்நேரமும் தயாராக இருக்க நாம் வீணாக அச்சம் கொள்வானேன்? துன்பங்களைக் கண்டு மிரள்வானேன்? இன்பங்களைக் கண்டு மயங்குவானேன்?

எனவே ஒவ்வொரு நாளையும் மனத் துணிவுடன் எதிர்நோக்குவோம். வாழவைக்கும் தெய்வம் நம்மோடிருக்கின்றார். நம் குரலைக் கேட்க ஆயத்தமாக இருக்கின்றார், உதவிக் கரம் நீட்ட தயாராக இருக்கின்றார், வருவது வரட்டும் என்கிற மனத்தைரியத்துடன் ஒவ் வொரு நாளையும், நம் வாழ்வையும் சந்திப்போம், வாழ்ந்து பார்ப்போம்.

எதிர் காலத்தை நோக்குபவன் உண்மையை உணர இயலாது. இப்பொழுதே இந்த விநாடியில் ஒன்றி யுள்ளவனே உண்மை வாழ்வு பெற்ற வனாகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

**ஆழியோன்**

## தமிழில் அறிவியல் இலக்கியம் கணினி தொடர்பான ஒரு கண்ணோட்டம்

ஈழத்து இலக்கியப் பரப்பில் சிறுகதை இலக்கியம், நாவல் இலக்கியம் நாடக இலக்கியங்கள் சம்பந்தமான வெளியீடுகள் குறிப்பிடத்தக்களவு வெளிவந்து கொண்டிருக்கின்ற போதும், அறிவியல் தொடர்பான இலக்கிய வெளியீடுகள் மிகவும் அபூர்வமாகவே வெளியிடப்படுகின்றன

கணினிதொடர்பான, இணையம் தொடர்பான அறிவியல் வளர்ச்சியில் வியக்கவைக்கும் சாதனைகள் உலக அளவில் காணப்படுகின்றன. இவை தொடர்பான அறிவியல் நூல்கள் ஆங்கிலம் உட்பட பல சர்வதேச மொழிகளில் சுடச்சுட வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ் மொழியில் இவ்வாறான அறிவியல் நூல்கள் கிடைப்பதில்லை. எனினும் தென்னிந்தியாவில் இருந்து ஒரிரு சஞ்சிகைகள் கணிப்பொறி தொடர்பாக வெளிவருகின்றன. இலங்கையிலும் அண்மைக்காலமாக 'கம்பியூட்டர் ருடே' என்னும் தமிழ் மாத இதழ் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவ்விதழை நிறைய வாலிபர்களும், யுவதிகளும் வாங்கி வாசிப்பதை பார்க்கும்போது மிகவும் சந்தோசமாக உள்ளது. எனவே எமது பிள்ளைகளும் அறிவியல் சார்ந்த துறைகளில் மிகவும் ஆர்வமாக இருப்பது நன்கு விளங்குகின்றது. எனினும் அவர்களின் அறிவுப்பசிக்கு ஏற்ற அளவு அறிவியல் நூல்கள் இலங்கையில் தமிழில் வெளிவருவதில்லை.

நாம் அறிந்தவரையில் 'ரமணன்' எழுதிய கணிப் பொறி சம்பந்தமான இரண்டு நூல்கள் தமிழில் வெளி வந்திருக்கின்றன. வேறு எதுவும் வெளிவந்ததாக தகவல்கள் இல்லை.

அரசகரும மொழி ஆணைக்குழு தெரிவு செய்யப் பட்ட சில பாடசாலைகளுக்கு 'கணிப்பொறியியல் என்னும் தமிழ் மொழிமூலமான நூல்களை அண்மையில் அனுப்பி வைத்துள்ளது.

இப்புத்தகம் தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. 2000ம் ஆண்டில் முதற்பதிப்பு வெளிவந்துள்ளது. முனைவர் வெ. பொன்னவைக்கோ, முனைவர் வெ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இதனை எழுதியுள்ளார்கள். கணிப்பொறி சம்பந்தமான ஆரம்ப விளக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ள இவ்விலக்கியம் படிப் படியாக ஒவ்வொரு அதிகாரமாக கணிப்பொறி தொடர்பான விளக்கங்களை தந்து கொண்டே செல்கின்றது. அருமையான புத்தகம்.

ஆனால் இதில் ஒரு சிக்கல். இலங்கையின் கலைச்சொற்களுக்கும், இந்திய கலைச் சொற்களுக்கும் உள்ள வேறுபாடுகள் இலங்கையின் வாசகர்கட்கு சங்கடங்கள் ஏற்படுத்த வாய்ப்புண்டு. உதாரணமாக mouse என்பதற்கு 'சுண்டெலி' என்னும் தமிழ்ப்பதம் பயன்படுத்தப் படுகின்றது. ஆனால் இலங்கையின் 'தகவல் தொழிநுட்ப கலைச்சொல் அகரமுதலி'யில் சுட்டி என்னும் பதம் பயன் படுத்தப்படுகின்றது.

எனவே 'கணிப்பொறியியல்' என்னும் புத்தகத்தை வாசிக்கும் போது அரசகரும மொழிகள் ஆணைக் குழு வெளியிட்டுள்ள 'தகவல் தொழில் நுட்ப கலைச்சொல் அகர முதலி'யை சற்றும் புரட்டிப்பார்ப்பது நன்று.

இந்தஅகரமுதலியை (Glossary) தயாரிப்பதில் பேராசியர் கா. சிவத்தம்பி ஐயா அவர்கள்பெரும் பங்காற்றியுள்ளார். தமிழக அறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் உதவியும் பெறப்பட்டுள்ளது.

இவ்வகரமுதலியின் விசேட அம்சம் என்னவென்றால் வழக்கு வேறுபாடுகள் உள்ளவிடத்து இலங்கை வழக்கு(இ.வ) எனவும் தமிழ்நாட்டு வழக்கு (த.வ) என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக Access – பெறுவழி (இ.வ) அணுக்கம் (த.வ) என்றவாறு கலைச்சொல் விளக்கம் தரப்படுகின்றது.

இதே வேளையில் இலங்கையில் Computer என்பதன் தமிழ்ப்பதமாக கணணி, கணினி என்ற இருவகை பதங்கள் பாவிக்கப்படுகின்றன. ஆனால் உண்மையில் பயன்படுத்த வேண்டிய சொல் கணினி என்பதாகும். 'கணிப்பொறியும்' ஏற்றுக் கொள்ள வேண்டிய கலைச் சொல் என்று அரசகரும மொழிகள் ஆணைக்குழு வலியுறுத் துகின்றது.

எனவே 'கணிப்பொறியல்' போன்ற தரமான கணினி அறிவியல் இலக்கியங்களும் தமிழ்மொழிமூலம் இலங்கையில் வெளியிடப்பட வேண்டியது அவசியம்.

இவ்வாறான அவசியம் கணினித்துறைக்கு மட்டுமல்ல ஏனைய விஞ்ஞான (அறிவியல்) துறைகட்கும் பொருத்தமானதாகும்.


நமது பல்கலைக்கழகங்களும். அறிஞர்களும் இம்முயற்சிகளில் ஈடுபாடு காட்ட வேண்டியது அவசியமும் அவசரமும் கொண்ட ஒரு தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைகள் பலவிதம்

- எம். எல். எம். அன்சார்



நாட்டிலின் றெங்கும் மலிவாய்
நடக்கிற கொலையே ராளம்!
நீட்டிதுப் பாக்கி யாலே
நீதியைக் கொன்று, விலையைக்
கூட்டிய தாலே, ஏழை
கொண்டநிம் மதியைக் கொன்று,
ஊட்டிய துவேசப் பாலால்
உயிரையும் கொலைசெய் தாச்சு!

பதவியென் னும்போ தையால்
பாவையாம் நேர்மை தன்னை
நிதமுமே கொன்று, வஞ்சம்
நெஞ்சிலுண் டான தாலே
கதறவே அன்பைக் கொன்று,
கலவரத் தீயேந் தியதால்
சுதந்தரம் தனைக்கொன் றிங்கு
சுட்டழித் தும்விட் டாச்சு!

ஆளுமா சைகொண் டோர்கள்
ஆணவப் பைத்தி யத்தால்
நாளுமே உரிமை தன்னை
நசுக்கியே கொன்று, உலகில்
வாழுமெக் கால மெல்லாம்
வாங்கிடும் லஞ்சச் சதியால்
மேலும்நல் சத்தி யத்தை
முழுக்கவே கொன்றாச் சிங்கு!

மற்றவர் பொருளி லாசை
மலர்ந்ததா லுயர்பண் பதனைப்
பற்றவைத் தேகொன் றீங்கு
'பாதக' ப் பிணியு யத்தில்
தொற்றிய தாலே, நேசத்
துய்மையைக் கொன்று, மதுவின்
உற்றநண் பன்னா னதினால்
'உயர்வை' யும் கொன்றாச் சிங்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் யுகம், கணினி யுகம் என்று வளர்ச்சியின் ஏணிப்படிகளில் ஏறிச் செல்லச் செல்ல இன்றைய மனித சமூகம் மனித மாண்பை மறந்து விட்டதா என்று எண்ணத் தோன்றுகிறது. என்றும் இல்லாத வகையில் இன்று உலகமெங்கிலும் மனித உரிமைகள் பற்றி அதிக மாகப் பேசப்படுகின்றது. மனித உரிமைகளுக்கான அமைப் புகளும் அதிகமாகத் தோன்றியுள்ளன. இருந்தபோதிலும் மனித உரிமை மீறல்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. 1989 இல் எழுந்த இனப்போராட்டங்களின் எழுச்சிகளை ஒடுக்கும் வகையில் ஆயிரக்கணக்கானோர் சிறைப்பிடிக்கப் பட்டு, சித்திரவதைக்கு உள்ளாகி, கொல்லப்பட்டிருக் கின்றனர் என்று உலகப் பொது மன்னிப்பு மன்றத்தின் 1990 ஆம் ஆண்டின் அறிக்கை தெரிவிக்கிறது.

பொதுவாகக் கொலை, வன்புணர்ச்சி, சிறைக் கொடுமை, திடீரெனக் காணாமல் போதல், வெட்டுதல் போன்றவற்றை மட்டுமே பெரிய மனித உரிமை மீறல் களாகப் பார்க்க நம்மைப் பழக்கியிருக்கிறார்கள். ஆனால் இன்று உலகம் ஒரு குட்டிக் கிராமமாக மாற்றப்பட்டு, அதன் நாட்டாண்மையாக, சட்டாம்பிள்ளையாக ஒரு சில உலக அமைப்புகள் முதல் உலக நாடுகளில் இயங்கிவருகின்றன. இந்த உலக அமைப்புக்களான உலக வங்கி, பன்னாட்டு நிதி நிறுவனம் (imf) போன்றவற்றின் திரைமறைவு விளையாட்டுக்களை ஆய்ந்தால் அவற்றின் கோர முகம் தெரியவரும். மனித உரிமை மீறலைத் திட்டமிட்டு நடத்தும் அவலமும் புரியும். இந்தப் பூமி, இதன் வளம் அனைத்தும் ஒரு சிலருக்கோ அல்லது இந்தத் தலை முறையினருக்கோ மட்டும் உரியன அல்ல. மாறாக, மனித இனம் முழுவதற்கும் சொந்தமானது. நாளையச் சந்ததி யினரின் உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் பாது காப்பதும் நமது அடிப்படைக் கடமையாகும்.

இக்கட்டுரையில் உலக அமைப்புகள் என்று சொல்லப்படுபவை எவ்வாறு திட்டமிட்டு ஏழை நாடுகளின் உரிமைகளை அழிக்கின்றன: மனிதம் மாண்புடன் வாழ விடாமல் செய்கின்றன என்பதைக் கோட்டிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

## அ. பன்னாட்டு அமைப்புகளும் மனித உரிமை மீறலும்

இன்றைய உலகம் முதலாம், இரண்டாம், மூன்றாம் உலகம் எனப் பகுக்கப்பட்டுள்ளது. இவற்றை யெல்லாம் கடந்து உலகமயமாக்கல் என்ற ஒற்றைப் பரிமாணத்தையும் சந்தித்து வருகின்றோம். இன்றைய வளரும் மூன்றாம் உலக நாடுகள் பன்னாட்டு நிறுவனங் களாலும் நிதியங்களாலும் குரல்வளை நசுக்கப்பட்டு கடன் சுமையால் திணறிக் கொண்டிருக்கின்றன. உலக அமைப்புகள் ஏழை நாடுகளைச் சுரண்டி மனித உரிமை மீறலில் ஈடுபட்டு வருகின்றன. சோமாலியாவின் வறுமையும் அவலமும் இந்த அமைப்புகளின் கொடூரத்தை வெளிப்படுத்து கின்றன. ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்ல அது உண்மையாகவே மாறிவிடுகிறது. கடன், வளர்ச்சி, உதவி என்ற பெயரில் ஏராளமான பணம் மூன்றாம் உலக நாடுகளில் கொட்டப்படுகிறது என்று மக்கள் நம்ப வைக்கப்படுகிறார்கள். ஆனால் வளரும் நாடுகளிலிருந்து வளர்ந்த ஆதிக்க நாடுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது அதிகம் என்பதுதான் உண்மை.

# ஆட்டுத் தோல் போர்த்திய ஓநாய்கள்

✦ யேசு அந்தோனி

* வளரும் நாடுகள் செலுத்திய வட்டி (1970 – 1982) ரூ.286,800 கோடி.
* தொழில்நுட்பச் சார்புக்காகச் செலுத்திய தொகை ரூ.36,000 – 60,000 கோடி.
* வளரும் நாடுகளில் இருந்து சுரண்டப்பட்ட மனித மூலதனம் ரூ.61,200 கோடி.
* ஸ்விஸ் வங்கியில் போடப்பட்டுள்ள வளரும் நாடுகளின் முதலீட்டு நிதி ரூ.9,700 கோடி.

இவ்வாறு கடனாளியாகிப் போன வளரும் நாடுகள் நிதி நிறுவனங்களின் நெருக்குதலால் சுகாதாரம், கல்வி முதலா னவற்றிற்கு நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து, உணவுப் பொருட்களுக்கான மானியத்தை நீக்கி, அரசு டைமைத் தொழிற்சாலைகளைத் தனியார்களுக்கு விற்று ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கின்றன.

உலக அமைப்புக்கள் அனைத்தும் முதல் உலக நாடுகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு செயல் படுகின்றன. வளரும் நாடுகளுக்குத் தேவையான உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி, சுகாதாரம், குடிநீர், வீட்டு வசதி போன்றவை கண்டுகொள்ளப்படாமல் இலாபம், ஏற்றுமதி என்ற பன்னாட்டு நிறுவனங்களின் ஒருதலைப்பட்சத் திட்டத்தினால் மக்களின் வாழ்வுரிமை கேள்விக்குட்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாம் உலக நாடுகளின் கச்சாப் பொருட்கள், காடுகள், வளங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு ஒட்டு மொத்தப் பொருளாதாரமே இன்று நிலைகுலைந்து போயுள்ளது. வளரும் நாடுகளின் வியாபாரம் நன்றாக நடைபெற ஏதுவாகப் புறவழிச் சாலை, நெடுஞ்சாலை வசதி, துறை முக மேம்பாடு என்று பணத்தை வாரி இறைக் கின்றனர். ஆனால் அடிப்படைத் தேவைகள் கண்டு கொள்ளப்படுவதில்லை.

மறுபுறம், மனித உயிர் வாழ்விற்கான ஆதாரங்களையே அழிக்கும் பணியில் இவ்வமைப்புகள் ஈடுபட்டு வருகின்றன. ஆபத்தான அணு உலைகள், தாப்பர் டூபாண்ட், என்ரான் போன்ற இயற்கையை அழிக்கும் தொழிற்சாலைகளை வளரும் நாடுகளில் அமைக்கின்றன. தோலாடை ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலைகளின் கழிவுகள் நிலத்தை மாசுபடுத்துகின்றன. இறால் பண்ணைகளும் இதே விளைவைத்தான் ஏற்படுத்துகின்றன. பணக்கார உல்லாச வாழ்விற்கு உடல்நலத்திற்கு வளரும் நாடுகளின் மண்ணும் வானமும் காற்றும் அழிக்கப்படுவதே இங்கு மனித உரிமை மீறலாகும். 1/3 பகுதியான வளத்தை அனுபவித்துக்கொண்டு, 2/3 பகுதியான வளரும் மக்களுக்கு 17% வளத்தை மட்டுமே தந்திருப்பது உண்மையிலேயே மிகப் பெரிய மனித உரிமை மீறல்.

வளர்ந்த நாடுகளின் கையில் சிக்கித் தவிக்கும் நவீனத் தகவல் அமைப்புகள் ஏகாதிபத்தியச் சிந்தனையினால் மக்களின் ஒழுக்க வாழ்க்கையையே சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இன்றைக்கு ஆபாசத்தை, வக்கிரத்தைத் திணித்து உடலுறவுக் காட்சிகளைத் தாராளமாக்கி வருகின்றன. காதலன்/காதலியை வளைத்துப்போட குறிப்புக்களைக் காட்டுகிறார்கள். சென்சார் செய்யப்படாத 20,000 வீடியோ படங்கள், 30,000 செக்ஸி போட்டோக்கள், டேட்டிங் போய்வந்தவர்களின் விரசமான அனுபவப் பகிர்வு.... என்று இளைஞர்களைத் தடம்புரள வைக்கின்றன. இதுதான் தகவல் உலகின் வளர்ச்சி. இன்று வளரும் நாடுகளில் செயல்படும் சுற்றுலாத்துறை அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்காக நம் சிறுமிகள், சிறுவர்கள், பெண்களின் கற்பை விலை பேசுகிறது. குறைந்த அளவு வேலை செய்து, அதிக ஊதியம் பெற்று, வருடத்திற்கு இரு முறையாவது உல்லாசப் பயணம் என்று வளரும் நாடுகளுக்கு மேலை நாட்டினர் செல்கின்றனர். ஆசியாவில் சிறார் விபசாரத்தைப் பற்றி ஆய்வு செய்த யூனிசெப் இந்தியா/இலங்கை பற்றிக் குறிப்பிடும்போது தாராளமயமாக்கலுக்குப் பின் அந்நியச் சுற்றுலா வருவாய்க்கு இந்நாடுகள் கொடுத்துவரும் ஊக்கத்தினால்தான் நாடெங்கிலும் சிறார் விபசாரம் தலை விரித்தா டுகிறது என்கிறது. இவ்வாறு வளரும் நாடுகளின் மண்ணை, மக்கள் வளத்தை அழித்து அவற்றின் இறையாண்மையையே கேள்விக்குட்படுத்துகிறது.

**நமது புனித உள்ளம் - கோயிலில் உள்ள போது எழும் தெய்வீக உணர்வு எவ்வளவுக் கெவ்வளவு நமது அன்றாட நடைமுறை வாழ்வில் இறங்கிக் கலக்கிறதோ அவ்வள வுக்கவ்வளவு நமது வாழ்க்கை சமமடையும்; உறுதி பெறும். தெய்வீகம் நாள் பூராகவும் நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் சொல்லும் ஒவ்வொரு சொல்லிலும் வெளிப்படும்.**

## ஆ. வளர்ச்சியும் மனித உரிமை மீறலும்

இன்றைய அறிவியலின் அசுர வளர்ச்சி பிரமிக்கவைக்கிறது. அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி என்று பேசப்படுகிறது. ஆனால் இந்த அறிவியல் வளர்ச்சி, கண்டுபிடிப்பு, அறிஞர்களின் உழைப்பு இவற்றின் மையம் எது என்று பார்த்தால் வேறு பதில் வருகிறது. வளரும் நாடுகள் ஓர் உண்மையான வளர்ச்சியை அடைந்து கொண்டிருப்பதற்குப் பதிலாக ஓர் ஆழமான, கட்டமைப்பு ரீதியான நெருக்கடிக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றன. அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றின் துணையுடன் முதல் வளர்ச்சிப் பாதை மூன்றாம் உலகிலும் பின்பற்றப்பட்டது. இதனால் மக்களின் அடிப்படைத் தேவைகள் நிராகரிக்கப்பட்டன. இந்தப் பூவுலகு மனிதர் வாழ்வதற் காகப் படைக்கப்பட்டது. இயற்கையைப் பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். இன்றைய நவீன அறிவியல் தொழில் நுட்பங்கள், வணிகக் கலாச்சார நுகர்வு வெறி, போர்த் தொழில் ஆகியவற்றால் இயற்சை சூழல் மாபெரும் அழிவுக்குள்ளாகி வருகிறது. காடுகள் அழிப்பு, ஓசோன் படலங்கள் துளையாதல், மலையின மக்களின் இடப் பெயர்வு, ஒற்றைப் பயிர்ச் சாகுபடியின் விளைவாகச் சுற்றுச் சூழல் சமன்பாடு குலைதல், தொழில் துறைக் கழிவுகள், பூச்சிக் கொல்லிகளை அதிகமாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக நீரும் காற்றும் மாசுபடல் ஆகியவை வளர்ச்சியின் தவிர்க்க இயலாத பின்விளைவுகள். இதற்கு யார் காரணம்? ஆதிக்கம் செலுத்த நினைக்கும் சுயநலவாதிகளின் நுகர்வு வெறியே.

உலகப் போர்கள், அணுஉலைச் சிதைவு, நச்சு வாயுக்கள், பசுமைப் புரட்சிகள், நவீன மருத்துவம் எல்லாம் அறிவியல் வளர்ச்சியின் அழிவுச் சாட்சிகள். உலக வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் வளர்ந்த நாடுகளில் உள்ள நஞ்சுகளை உருவாக்கும் தொழிற்சாலைகளை மூன்றாம் உலக நாடுகளுக்கு மாற்ற அறிவுறுத்தியிருக்கிறார் என்பதே மனித உரிமை மீறலை வெளிப்படுத்துகிறது. கழிவுகள் கொட்டப்படும் இடமாக இது மாற்றப்படுகிறது. உரத் தொழிற்சாலைகள், பூச்சிகொல்லி மருந்துகள், வீரிய விந்து நிறுவனம் போன்றவற்றால் பூர்வீக மரபு சார்ந்த விதைகள் அழிந்து விட்டன. அதே வேளையில் மூன்றாம் உலகிலிருந்து உயிர்மப் பொருட்கள், தொழில்வளர்ச்சி அடைந்த நாடுகளின் ஜீன் வங்கிகளுக்கு அனுப்பப்படுகின்றன. இன்று பல வளரும் நாடுகளில் தாய்ப்பாலில் நஞ்சு அதிகரித்திருக்கிறது. காரணம் பயிர்த் தொழிலில் பயன்படுத்தப்படும் பன்னாட்டு பூச்சிகொல்லி மருந்துகள். பசுமைப் புரட்சி வன்முறையையும் சூழலியல் பற்றாக்குறையையும் மட்டுமே விட்டு வைத்துள்ளது. இன்று அணுகுண்டுச் சோதனைகளும் சூழலை வெகுவாகப் பாதிக்கின்றன. வருடா வருடம் 400 – 600 மில்லியன் டாலர்கள் ஆயுத உற்பத்திக்குச் செலவிடப்படுகின்றன. யார் உற்பத்தி செய்வது? யாருக்காக? ஏன் ஏழை நாடுகளில் இன்னும் கலவரங்கள், போர்கள் தொடர்கின்றன? மனிதரின் மாண்பைக் காக்காத, உரிமைகளைப் பேணாத, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத இந்த வளர்ச்சிகள் மனித உரிமைகளுக்கு எதிராக மக்கள் வாழ்வைத் தடம்புரள வைக்கின்றன. பன்னாட்டு நிதியம் பற்றி ஜனாதிபதி காரலோஸ் ஆன்ட்ரஸ் பெரஸ் குறிப்பிடும்போது மக்களைக் கொல்லும் பொருளாதார எதேச்சாதிகாரமே பன்னாட்டு நிதியம் என்கிறார். உலக நிறுவனங்கள் முன் வைக்கும் வளர்ச்சியின் விளைவு மனித உரிமை மீறலில் தான் முடியும்.

**வாழ்வின் திறவுகோல்!**

கடவுளின் படைப்பு அனைத்திடமும் அன்பு செலுத்துங்கள். ஒவ்வொரு மணலையும் ஒவ்வோர் இலையையும் ஒவ்வோர் ஒளிக்கிற்றையும் அன்புடன் நோக்குங்கள் விலங்குகளை, தாவரங்களை ஒவ்வொன்றையும் நேசியுங்கள். அப்போது அதனுள் விளங்கும் கடவுள் தன்மை என்ற புதிர் உங்களுக்கும் புலனாகும் அது புரியும்போது நீங்கள் நாளும் வளர்வீர்கள். பின் உலகம் பூராவையும் நேசிப்பது உங்களுக்கு எளிதாகும். அப்போது இவ்வுலகை இப்பிரபஞ்சத்தை அன்பு ஒன்றுதான் பிணைத் திருக்கிறது என்பதை உணர்வீர்கள்.

– டாஸ்டாவ்ஸ்கி –

### முடிவுரை

மனிதன் உரிமையுடன் பிறக்கின்றான். இந்த மனித உரிமை என்பது ஒவ்வொரு மனிதனும் மாண்புடன் வாழ உதவும் அடிப்படை மதிப்பீடாகும். இந்த மனித உரிமைகள் வாழ்வியல், அரசியல், பண்பாடு, சமூக, பொருளாதார உரிமைகளாக வெளிப்படுகின்றன. இந்தக் கட்டுரையில் மனிதனை மனிதனாக வாழவிடாமல், அவன் வாழ்விற்காக உள்ள அனைத்தையும் அழிக்கும் மனித உரிமை மீறலினை வெளிப்படுத்த முயன்றுள்ளேன். 'மனித உரிமை' என்று பேசும் உலகளாவிய அமைப்புகளே வளர்ச்சி, உதவி, கடன் என்ற போர்வையில் மனித உரிமைகளை மீறிவருகின்றன.

உரிமைகள் மக்களைத் தட்டி எழுப்பிச் சமூகமாக நிறைவுடன் வாழ உதவுகின்றன. எனவே சமூக வாழ்வை, சமூக உறுப்பினரின் வாழ்வைச் சிதைக்கும் எதுவுமே மனித உரிமை மீறலே. மனித சமூகத்தைப் பாதிக்கும் ஒவ்வொரு செயலும் கிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்கு முரணானதே. விவிலியம் உரிமை என்பதை நீதி என்றே பொருள் கொள்கிறது. எனவே அநீதி எல்லாம் உரிமை மீறலே என்று உணரப்படல் வேண்டும். எப்போதெல்லாம் தனிமனித, சமூக உரிமைகள், நலன்கள், வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டனவோ அப்போதெல்லாம் நீதியின் கடவுள் இழந்துபோனதை நிலைநிறுத்தச் செயல்பாட்டில் இறங்கியிருக்கிறார். இறைவனின் சாயலான மனிதம் நிர்வாணமாக, படிப்பறிவில்லாமல், பஞ்சத்தில் பசியோடும், ஊருக்குப் புறம்பேயும், சதை வியாபாரத்தில் நுகர்வுப் பொருளாக்கப்பட்டும் நிலைகுலைந்து போயுள்ளது. இந்த மனித உரிமை மீறலின் புதிய வடிவங்களை, அமைப்புகளை உணர்ந்துகொண்டு பிறருக்கும் தெரிவிப்பது, உரிமைக் குரல் எழுப்புவது, இயக்கமாவது அவசியமான ஒன்று. இழந்து போன மனித மாண்பு/உரிமைகளுக்காகப் போராடி அவற்றை மீட்டெடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயல் ஓயும்

சி. சுதந்திரராஜா
தாவடி



சிறுகதை

கணநாதனைக் கண்ட கணத்திலேயே டிலுக்சி தடுமாறித் தான் போனாள். ஆளுமையின் சிகரத்தில் நிற்பான் போல அவளுக்குள் அவன் எடுப்பாகித் தெரிந்தான். மஞ்சள் சேர்ட்டில் – அதே நிறத்தில் காற் சட்டையும் போட்டபடி – முதலில் அவனைப் பார்த்த மாத்திரத்தில் அவளால் ஈர்க்கப் பட்டு விட்ட வளமார்ந்த வாலிபத்துக்கு உரியவனான்.

ஆனாலும் டிலுக்சியிடம் மனதைப் பறிகொடுத்தவன் மனோகரனே. கண்ணங்கரேலென்ற அவனில் என்ன தான் கண்டறியப் போறாளோ! எனவே, அவளது தோழியர் எல்லாரும் வியப்புக் காட்டிக் கொட்டினர். திரண்ட தோள் வரையிலும் நெளிந்து குலுங்கும் சுருள் மயிரும் வெண் பளிங்கு மேனியும் அழகு தேவதையாகி விட்ட அவளுக்கு மனோகரன் பொருத்த மில்லாதவன் போல கணிக்கப்படலானான்.

கணகநாதனைக் காணு முன்பே மனோகரன் தன் காதலை டிலுக்சி மீது வலையாக விரித்து விட்டிருந்தான். முதலில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் டிலுக்சி கசாய மருந்து குடிப்பவள் போலப் பட்டாலும் காலைப் போக்கில் எல்லாம் ஜீரணமாகிக் கொண்டது தான் புதுமை.

வீடுவரை அழைத்துப் போனாள். குருவானவரிடம் கூட்டிச் சென்று மனோகரனின் காதலுக்கு ஓர் அங்கீகாரமும் ஆலோசனையும் கேட்கப்பட்டது.

"பூசைக்கு ஒழுங்கா வாறனீரோ"

"ஓம் பாதர்"

இரண்டு கைகளையும் நீட்டிய படி வரவேற்கும் இயேசுவின் சிலையே மனோகரனை வரவேற்றது. டிலுக்சியின் கட்டழகு அவனைக் கட்டிப் போட்டது. டிலுக்சியின் தாய், ஊர் பெயர் விபரம் மட்டுமே கேட்டறிந்தாள். சுற்றம்பற்றியெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க அவளால் முடிந்ததில்லை. பாதரும் டிலுக்சி குடும்பமும் உறவுக்காறரே.

அறிமுகப்படுத்துவதில் டிலுக்சி முன்னிலை எடுத்தாள்.

"தம்பி இந்தக் காலத்தில சௌதி ஓமான் வழிய போய் உழைச்சால் தான் முன்னேற்றம்"

"ஓமோம்"

"உமக்கு நம்பிக்கையான ஏஜன்ஸி யாரும் இல்லை"

'ச்'

"எங்களின்ர சேர்ச் சேவிஸுக்கு வாற ஒருத்தர் மஸ்கட்டில இருந்தவர். இப்ப ஏஜன்ஸி நடத்திறார் நல்ல மனிசன்"

பாதரே சான்றிதழ் வழங்கினார்.

"நானே அனுப்ப ஏற்பாடு செய்யிறன்"

டிலுக்சியின் தகப்பனாரே முன்வந்தார்.

மனோகரனால் மறுத்திட முடியவில்லை.

இன்ஸ்ரன்ற் ஒரேஞ் பவுடரை நீரூற்றியபடி குவளைகளில் எடுத்து வந்து எல்லோருக்கும் நீட்டிக் கொண்டாள் டிலுக்சி.

"ஒரு பிரிட்ஜ் இருந்தா எவ்வளவு நல்லம்" குறைப் பட்டாள்.

"என்ரை சேமிப்புக் கணக்கில இருக்கிறதை எடுத்து நாளைக்கே ஒரு பிரிட்ஜ் வாங்கியருவன்" மனோகரன் ஆறுதல் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பிடியா ரொம்ப தாங்ஸ்" வியப்பால் தன்னையே இழந்தாள்.

சொன்னது போல் செய்து காட்டி அவளை மேலும் மயக்கிக் கொண்டான் மனோகரன். அவன் விமானத்தில் ஏறிக் கொண்டதன் பின் பல மாதங்கள் கழிந்த பின்னரேயே கணநாதன் கண்ணில் பட்டான். வெளிநாடு போகின்ற அக்கறை ஏதுமே இல்லாதவனாய் இருந்ததே டிலுக்சியை இழுத்தது. ஆடம்பரம் கொடி கட்டிப் பறக்காத பிரகிருதியாகவே காணப் படலானான்.

பிரித்தானியப் பேரரசு விட்டுச் சென்ற எச்ச சொச்சங்கள் இன்னமும் இங்கே இருப்பது பற்றியே கணநாதனின் கவலையாகத் தொங்கி நின்றது.

இந்தப் பிரத்தியோக மனப் பாங்கே டிலுக்சியியை மனோகரனின் பிடியிலிருந்து கழன்றிட வழியெடுத்தது.

ஆனாலும் கணநாதனோ, "கணநேர இன்பங் கருதி உன் வாழ்க்கை வளத்தை இழக்க வேண்டாம்" என்றே அறிவுரை மொழிந்தான்.

"வெளியில போனா நிறையச் சம்பாதிக்கேலும்"

"எங்கட அடிமைத் தனத்தால வெளிநாடு பெரிசாத் தெரியாது" புதிய விளக்கங்கள் சொன்னான்.

"எங்கயாவது ஓடிப் போவமா?" அப்பாவித் தனத்திலும் ஆர்வத்தோடு கேட்டாள்.

புன்முறுவல் காட்டு பவனானான்.

"ஸீ-நைனி மோட்டபைக் வாங்கலாம் காசு தாறன்"

"வேண்டாம்"

எதனையுமே ஏற்க மறுத்தான்.

அவனது ஆண்மை பரிசோதனைக்கு உள்ளாயிற்று. இருக்கின்ற பணபலத்தைக் கொண்டு அவனை அடிமைப் படுத்துவதிலே டிலுக்சி தொடர் தோல்விகளைக் கண்டாள்.

புயல் அவனில் மையம் கொண்டிருப்பதை டிலுக்சியால் அறிய முடியவில்லை.


## தொண்டன்
## - கல்முனை மறைக்கோட்டச் சிறப்புமலர் -

எதிர்வரும் ஜூலை ~ ஆகஸ்ட் ஆகிய இருமாதங்களையும் இணைத்து கல்முனை மறைக் கோட்டச் சிறப்பு மலராக தொண்டன் வெளிவரவுள்ளது. இம்மலரைச் சிறப்பிக்க கல்முனைப் பிராந்திய எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

கதைகள், கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், வரலாற்றுக் குறிப்புகள், ஆய்வுகள், துணுக்குகள், கல்முனைப் பிராந்தியத்தில் கிறிஸ்தவச் செயற்பாடுகள்,சமூக விழாக்கள், மற்றும் சிறப்புத் தகவல்கள்

எனப் பலவகையிலும் சிறப்பு மலரைச் சிறப்பிக்க படைப்பாளிகளை அழைக்கின்றோம்

சுருக்கமாக, சுவையாக எழுதுங்கள்!

**ஆக்கங்கள் வந்து சேரவேண்டிய இறுதிநாள்** **25 ஜூன் 2001**

**முகவரி : ஆசிரியர் - தொண்டன், அ.பெ.எண் 44 மட்டக்களப்பு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாவின் மகத்துவம்

M.C.லோரன்ஸ்

பூமியில், ஒரு மானிடப் பிறவியை எல்லாம் வல்ல இறைவனாகிய பரமதந்தையே. தன் தூதனை விட்டு வாழ்த்தப்பெற்ற பாக்கியம் ஒரு பெண்ணுக்குக்கிடைத்தது. அவளே அன்னைமரி. லூக். 1:28ல் பரம தந்தையால் அனுப்பப்பட்ட வானதூதர், அன்னை மரியை "அருள் நிறைந்தவளே வாழ்க" என்று வாழ்த்துகிறான். இந்த அன்னைமரியாள் மூலம் நாம் அடையும் பாக்கியங்களோ ஏராளம்.

ஒருமுறை அன்னைமரியாள் எலிசபெத்தைக் காணச்சென்று அவளை வாழ்த்துகிறாள். மரியாளின் வாழ்த்தை எலிசபெத்துக் கேட்டவுடனே எலிஸ பெத்து பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு விடுகின்றாள். அவள் ஆவியில் நிரம்பி "பெண்களுக்குள் ஆசீர் வதிக்கப் பட்டவள் நீரே!" என்று மரியாளைவியந்து போற்றுகின்றாள். அதுமட்டு மல்ல, எலிஸபெத்தின் வயிற்றின் உள்ளே இருந்த குழந்தையும் எலிசபெத்தை ஆட்கொண்ட தேவ ஆவியால் நிரப்பப்பட்டு அக்களிப்பால் துள்ளுகிறது. லூக்.1:15-17, 1:40-45 இதை எடுத்துச் சொல்லுகின்றன. அப்படியானால் அவளது பிரசன்னத்தில் நாமும் இருந்தால் எவ்வளவு மகிமையான வல்லமையை அவளில் நின்று பெற்றுக் கொள்ளலாம்! அவள் மூலமாக நாமும் பரிசுத்த ஆவியை வல்லமையோடு பெற்றுக் கொள்ளலாமன்றோ.



இவளைக் குறித்துத்தான் இசை. 7:14ல் ஆண்டவர் முன்குறித்துச் சொன்னார். இதோ கன்னிப்பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள், அவன் 'எம்மானுவேல்' என்னும் பெயர் பெறுவான் என்று கன்னித்தன்மையில் இயேசுவைப் பெற்றெடுத்ததோடு மட்டுமல்ல, அன்னைமரி அன்றும் என்றும் கன்னிமை குன்றாத அன்பின் தாயாகவே விளங்குகின்றாள். ஆம் என்றும் கன்னிகை.

இவளைத்தான் ஆதி. 3:15ல் சாத்தானின் பகைவனாக பரமதந்தை ஏற்படுத்தினார். எனவே அன்னைமரி சாத்தானின் பாவக்கிரிகைகளுக்கு எதிராக வல்லமை மிக்கப்படையாகவே செயல் படுகின்றாள். சாத்தானின் தூண்டுதலால் நீ குடி வெறியனாக மாறி இருக்கலாம். அவன் உன்னையும் அறியாமல் உன் உள்ளத்தில் இச்சையைத் தூண்டி இருக்கலாம். நீ இப்போது அக்கிரமியாகவோ காமுகனாகவோ மாறிப்போய் இருக்கலாம். ஆனால் அன்னைமரியாளை நீ உறுதுணையாகப் பற்றிக் கொண்டு, அவளை மன்றாடி வந்தால் அவள் உன்னையும் அறியாமல், உன்னை அழிவின் பாதையிலே வழிநடத்தும் சாத்தானை வென்று வீழ்த்தி உனது பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலை தருவாள். நீ பரிசுத்தம் அடைவது உறுதி. இது பலரது அனுபவம்.

ஆனால் சாத்தானோ அவளுக்கெதிராய் செயல் புரியும்படி மனிதனுக்குள் புகுந்து வருகிறான். அன்னை மரியை நிந்திக்க எழுகிறன்.

சகோதரனே நீ அன்னைமரியை என்றாவது நிந்தித்திருக்கிறாயா. நாமும் அன்னைமரியை நிந்திக்கும்படி நம்முள்ளேயும் வந்து சாத்தான் தூண்ட முயல்வான். நாம் எச்சரிக்கையோடே இருப்போம்.

பரிசுத்த ஆவியானவரால் நிறையப் பெற்றவளாய், "இந்நாள் முதல் எல்லாத் தலை முறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே" என்று அன்னை மரியைக் குறித்து சொல்கின்ற வசனத்தின்படி நாமனைவரும் அவளைப் போற்றுவோம். பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளவும், மாறாத பாவப் பழக்கத்திலிருந்து நிரந்தர விடுதலை பெறவும் அன்னை மரியாளை நம் வல்லமை மிக்கத் துணையாகக் கொள்வோம்.

வாழ்வில் வெற்றி பெறுவோம். தம்மைபோல நம்மையும் பரிசுத்த பூச்செண்டாக மாற்றி கடவுளுக்குள் ஒப்புக்கொடுப்பாள் மோட்ச பாக்கியத்திலே நம்மையும் கொண்டு சேர்ப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நோர்வேயின் சமாதான முயற்சிகள் மீண்டும் தொடங்கிய இடத்திலேயே வந்து உட்கார்ந்துள்ளன. நோர்வேத் தூதுவர் எப்படித்தான் பறந்து பறந்து பேசித்திரிந்தாலும் பிரச்சினையில் சம்மந்தப்பட்டவர்கள் இதய சுத்தியோடு ஒத்துழைக் காதவரை இலங்கையில்சமாதானம் என்பது எட்டாக் கனிதான். பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவே இத்தகைய இழுபறி எனில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தபின் அது எப்படி எல்லாம் இழுபடுமோ, எத்தனைதரம் முறிபடுமோ அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.!

# சமாதான நகர்வுகள் ?

## ஓர் அரசியல் கண்ணோட்டம்.

நோர்வேத்தூதுவர் சமாதான முயற்சியை ஆரம்பித்து வன்னியில் போராளிகளின் தலை வரைச் சந்தித்த போதே சமாதானத்தின் பால் தங்களுக்குள்ள ஆர்வத்தையும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க – அதற் கேற்ற நல்லெண்ணச் சூழலை உருவாக்குவதன் அவசியத் தையும் அவர்கள் வலியுறுத்தி இருந்தனர். அந்த நல் லெண்ணச் சூழலை உருவாக்க வன்னிக்கான பொருளா தாரத் தடைகளை அகற்றுதல், யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துதல் தொடர்ந்து அதை நீடித்தல், தமது இயக்கத் துக்கு விடுக்கப்பட்டுள்ள தடையை நீக்கி தம்மை தமிழ் மக்களின் உத்தியோக பூர்வ பிரதிநிதிகளாக அங்கீகரித்தல் என்று தெளிவுபடுத்தி இருந்தனர். ஆனால் இன்றுவரை அரச தரப்பிலிருந்து இவற்றுக்குத் தெளிவான பதில் இல்லை. மாறாக புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்தத்தையும் ஏற்றுக் கொள்ளாது அரசு போராயு தங்கள் வாங்கிக் குவித்ததும், நாடுநாடாகப் பறந்து புலிகளைத் தடை செய்யுங்கள் என்று கூவத்திரிந்ததும் போர் நிறுத்த காலத்தில் படைகளை நகரச் செய்து கைவிட்டுப் போன பிரதேசங்களை மீண்டும் கைப்பற்றியதும், போர் நிறுத்த காலம் முடிவுக்கு வந்த அன்றே இரவோ டிரவாக தீச்சுவாலையைத் தொடங்கி தன்கையைத்தானே சுட்டுக் கொண்டதும் எல்லோரும் அறிந்த பழையகதை. தீச்சுவாலையின் விளைவு சமாதானத்தை நோக்கிய நகர்வாக இருக்கும் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எரிக்சொல்ஹெயிம் அவர்களின் பயணமும் தொடரும் குண்டு வெடிப்புகளும் அனைத்தையும் மீண்டும் சூனியத்துக்குள் தள்ளியுள்ளதாகவே கருதப்படுகிறது. மக்களுக்கு நம்பிக்கை தரும் குரல்கள் எங்கிருந்தும் கேட்கவில்லை. மக்களின் கருத்துக்களும் மதத்தலைவர்களின் வேண்டுகோள்களும் கவனத்திற் கொள்ளப்படாது இராஜதந்திர நகர்வுகளிலேயே அதிக அக்கறை கொண்டிருப்பது போல் தெரிகிறது. தொடருகின்ற போரின் விளைவாக நாடு எதிர்நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடிகளும், விலையேற்றங்களும் அழிவுகளும், அவலங்களும் பேரினவாதிகளின் கண்களைத் திறக்கக் காணோம். பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டி லையும் ஆட்டமுனையும் வெளிநாடுகளை நம்பிப் பயனில்லை. தமது பொருளாதார – வியாபார நடவ டிக்கைக்கு சிரமந்தராத ஒரு றெடிமேட் சமாதானந்தான் அவர் களுக்குத் தேவைபடுகிறதே அன்றி இந்நாட்டை பல தசாப்தங்களாக அணுவணுவாய் அழித்துக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு நீதியான ஒரு தீர்வைக்காணுவதில், இந்நாட்டில் தமது அடிப்படை உரிமைகளையும், அடையாளங்களையும் இழந்து அடிபட்டு அழிந்து கொண்டிருக்கும் சிறுபான்மை மக்களுக்கு கௌரவமுள்ள ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் யாருக்கும் அக்கறையில்லை. ஆயுதங் களையும் அதைக்கையாளப் பயிற்சிகளும் கொடுக்கும் இந்த நாடுகள் சிறுபான்மையின மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு கைகொடுப்பார்கள் என்று நம்புவது சுத்த மடத்தனமாகும்.


சமாதானத்துக்கான அழுத்தம் வெளிநாடுகளிலி ருந்து அல்ல சொந்த நாட்டிலிருந்து எழவேண்டும். அது ஒரு மாபெரும் மக்கள் எழுச்சியாக உருவெடுக்க வேண்டும் பதவிக்காக அரசியல் நடத்தும் இந்த பௌத்த ஜனநாயக நாட்டில் போரை நிறுத்தி சமாதானத் தீர்வுகாணாவிட்டால் இனி பதவியில்லை என்ற நிலை உருவாக வேண்டும். அத்தகைய ஒரு மக்கள் எழுச்சியை உருவாக்க சமாதானத்தை விரும்பும் ஜனநாயக சக்திகள், மதபீடங்கள். சமூகநலத் தாபனங்கள், தொண்டர் நிறுவனங்கள் அனைத்தும் முன்வரவேண்டும்.

✦ மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்



**விவிலியம் சீடீ தட்டுக்களில்**

தமிழ் மொழியில் அண்மையில் வெளிவந்துள்ள திருவிவிலியத்தின் பொது மொழி பெயர்ப்பு அனைத்தையும் ஒரு கணணித்தட்டில் (சீடீ) வடிவமைத்து கனடாவில் வெளியட்டுள்ளார்கள். கனடா ஸ்காபரோவில் வசிக்கும் திரு.அன்ரன் பிலிப் சின்னராசா அவர்களின் அயராத முயற்சியால் இந்தக் கணணித்தட்டு (சீடீ) வெளியாகி உள்ளது. இதன் வசதியுடன் விவிலிய வசனங்களை, அதிகாரங்களை, சொற்களை மிக இலகுவாகக் கண்டுபிடிக்கவும் கணணி உதவியுடன் அச்சிட்டு எடுக்கவும் வழி சமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பழைய புதிய 200 கிறீஸ்தவப் பாடல்களை கணணியில் கேட்டு மகிழத்தக்கவாறும் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமனிதர் சுவாமி ஞானப்பிரகாசர்**

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் 125 வயது நிறைவினையும், அமரத்துவத்தின் 54வது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வளவில் சுவாமி ஞானப்பிரகாசரின் உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது. அங்கு உரையாற்றிய யாழ் ஆயர் பேருள் தந்தை தோமஸ் சவுந்திரநாயகம் அவர்கள்; மானிப்பாயில் பிறந்து யாழ். நல்லூரில் வாழ்ந்த, பெரிய மனிதர் சுவாமி ஞானப்பிரகாசருக்கு மானிப்பாய் பங்கு மக்கள் உருவச்சிலை திறப்பு விழா எடுத்ததையிட்டு பெரு மகிழ்வு அடைகிறேன். மறைப்பணி, தமிழ்ப்பணி சமூகப்பணி ஆகிய முப்பணிகளையும் முன்னெடுத்துச் சேவையாற்றிய மாமனிதர் சுவாமி ஞானப்பிரகாசர் என்று குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில் அறிவாற்றல்களை தன்னகத்தே கொண்டு விளங்கி சமுதாய வளர்ச்சி நோக்கி சிந்தித்தவர். அவருக் குக்கிடைத்த அளப்பரிய இறைவனின் கொடைதான் பணியாற்ற உறுதி அளித்தது. யாழ் மறைமாவட்டத்தில் அனேக ஆலயங்கள் இவரால் உருவாக்கப்பட்டவையே. பல அரிய தமிழ் கிறிஸ்தவ நூல்களை எழுதி அச்சேற்றி மறை பரப்பில் பெரும்பங்காற்றினார். இவரது வாழ்வை எமது இளந்தலை முறையினர் அறிந்து ஆராய்தல் வேண்டும் என்று ஆயர் மேலும் குறிப்பிட்டார்.

**பிராத்தனை செய்யும்போது உள்ளே இருக்கும் ஏதோ ஏதோ ஒன்று உயிர் பெறுகிறது. புதியதுடிப்பு துவங்குகிறது. நீரில் ஏற்படும் அலைபோல அந்தத் துடிப்பு புற உலகில் அதற்கேற்ற துடிப்பை - உயிரை உருவாக்குகிறது.**

**மறைப்போதகராக நடித்தவர் எரிந்து சாம்பல்**

ஒரிசா மாநிலத்தில் கடந்த ஆண்டு ஜனவரி 23ம் திகதி உயிரோடு கொழுத்தி எரிக்கப்பட்ட அவுஸ்திரேலிய மறைப்போதகர் கிரகாம் ஸ்ரெய்லின் ஓராண்டு நிறைவில் அந்த நிகழ்வினை மேடையில் நடித்துக் காட்டிய நடிகர் எரிந்து சாம்பலானார். அவர் தத்ரூபமாக நடிக்கிறார் என்று அவரின் நடிப்பை வெகுவாகப் பாராட்டியவர்கள் இறுதியில் அவர் உண்மையாகவே இறந்துபோனபோது அதிர்ந்து போனார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவுஸ்ரேலிய போதகர் கிரகாமையும் அவருடைய இரண்டு மகன்களையும் கொலை செய்த வழக்கில் இளம் குற்றவாளியான 13 வயதுடைய சுதர்சன் எனப்படும் செஞ்சு கைது செய்யப்பட்டான். சிறுவனாக இருந்தமையால் சிறப்பு நீதிபதி 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

**தேசிய பொது நிலையினர் மகாநாடு**

தேசிய பொது நிலையினர் மகாநாடு கடந்த ஏப்ரல் மாதம் 19 முதல் 22 வரை அம்பிட்டியா தேசிய குருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. பொது நிலையினர் ஆணைக் குழுவின் தலைவர் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் கலந்து கொண்ட 221 பேரில், 101 பொது நிலையினரும் 50 குருக்களும், 20 துறவறத்தினரும் இன்னும் விசேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்புப் பெற்ற 25 பேரும் பங்கு கொண்டனர். மாநாட்டின் கருப்பொருள் 'புத்தாயிரம் ஆண்டிலே தூய ஆவியால் நிரப்பப் பெற்று கிறிஸ்துவின் சாட்சியாய் இருப்போம்' என்பதாகும்.

**இரக்கத்தின் அன்னை குறித்து திருத்தந்தை**

இறை இரக்கத்தின் ஞாயிறு கொண்டாட்டங்களை ஒட்டி திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை அதன்பின் மூவேளை ஜெப உரையில் விசுவாசிகளுக்கு இரக்கத்தின் அன்னை குறித்து எடுத்தியம்பினார். இறைவனின் தாயான அன்னை மரி இரக்கத்தின் அன்னையாக அன்பு நிறைந்தவளாகச் செயல்பட்டாள். அவள் யேசுவின் பாடுகள் மரணம் மற்றும் உயிர்ப்பில் தன்னை ஆழமான விதத்தில் ஈடுபடுத்திக்கொண்டார் என்றார் திருத்தந்தை. சிலுவையின் அடியில் இவ்விரக்கத்தின் அன்னை கிறிஸ்துவின் சீடர்களின் தாயாக திருச்சபையின் தாயாக மனிதகுலமனைத்தின் தாயாக மாறினார் என்று மேலும் தம் மூவேளை ஜெப உரையின்போது எடுத்தியம்பினார். உயிர்த்த யேசுவிடம் நம்மை முழுமையாக ஒப்படைத்து அன்பின் முழு நிறைவைக் கண்டு புதிய ஆயிரமாம் ஆண்டுக்கான நம்பிக்கையைப் பெறுவோமென தன் உரையை வழங்கினார் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர்.

**வெசாக் தினத்தையொட்டி திருப்பீடச் செய்தி**

மனித குலத்துக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகள் இன்றியமையாதது என்பது குறித்து புத்தர்களின் புனித நாளான வெசாக் கொண்டாட்டத்தை ஒட்டி திருப்பீட பல்சமய அவை வெளியிட்ட செய்தி கூறுகின்றது. மக்களிடையேயும் மதங்களிடையேயுமான கருத்துப் பரிமாற்றங்களும் பேச்சுவார்த்தைகளும் அன்பும் அமைதியும் கொண்ட நாகரீகத்தை கட்டி எழுப்புவதை நோக்கமாகக் கொண்டவை என புத்த மதத்துக்கான தன் செய்தியில் கூறியுள்ள மதங்களிடையேயான பேச்சுவார்த்தைகளுக்கான திருப்பீட அவையின் செய்தி, கிறிஸ்தவர்களும் புத்த மதத்தினரும் ஒருவர் மற்றவரின் பாரம்பரியச் செல்வங்களை மதித்து, ஒருவர் மற்றவர்க்கிடையே ஒத்துழைப்புக்கான கல்வியை ஊக்குவிக்க வேண்டுமென விண்ணப்பிக்கின்றது. இவ்விரு மதத்தின் மக்களும் ஒன்றிணைந்து அன்பெனும் கலாசாரத்தை கட்டி எழுப்புவோமெனவும் இச் செய்தியில் கூறியுள்ளார் திருப்பீட அவையின் தலைவர் கர்தினால் சன்டிஸ் அரின்சே.

**சீனாவில் ஆயர் கைது**

சீனாவில் திருத்தந்தைக்கு விசுவாசமாயிருக்கும் ஆயர்கள், குருக்கள் மற்றும் பொது நிலையினர் தொடர்ந்து கைது செய்யப்படுவது அக்கத்தோலிக்க திருச்சபையை மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் நிறுத்தியுள்ளது என்று சீடே செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. இம்மாத தொடக்கத்தில் 82 வயதாகும் ஆயர் மத்தியாலே கைது செய்யப்பட்டார். இவரைக் கைது செய்வதற்கு சீன அரசு பல ஆண்டுகளாக முயற்சித்து வந்தது என்றும் வத்திக்கானின் செய்தி நிறுவனமான சீடே கூறியது ஏப்ரல் மாதம் 13ம் திகதி ஹெபேய் மாகாணத்தில் 79 வயதாகும் ஆயர் ஸெக்சென்சி யாங் கைது செய்யப்பட்டார், மற்றும் இவர் 30 ஆண்டுகள் சிறையில் இருந்தவர் என்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள குவாங் பவுன்டேசன் கூறியது.

**எதற்கு முதலிடம்?**

காலையிலும் மாலையிலும் செய்ய வேண்டிய முதல் வேலையாக பிராத்தனையை வைத்துக் கொள்வது நல்லது. எனக்கு இப்போது நேரமில்லை: ஒரு மணி கழித்து பிறகு செய்கிறேன் என்று உன்னை நீ ஏமாற்றிக் கொள்ளாதே. அத்தகைய மனிதன் பிராத்தனையைவிடத் தனது தொழிலையும், வியாபாரத்தையும் முதலாவதாகக் கருதுகிறான் அதன்பிடிகளில் பின்னால் சிக்குண்டு தவிக்கிறான்.

– மார்ட்டின் லூதர் –

**வியட்நாமில் கத்தோலிக்கர் பணி**

வியட்நாமில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் கத்தோலிக்கம் பரவ ஆரம்பத்திலிருந்து அந்நாட்டு மொழிக்கும் இலக்கியத்துக்கும் கலாசாரத்துக்கும் வியட்நாம் பொதுநிலை கத்தோலிக்கரும் வெளிநாட்டு மறைப் போதகர்களும் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர் என்று யூக்கா செய்தி நிறுவனம் கூறியது. வியட்நாமின் தேசிய எழுத்து முறையை ரோமன் எழுத்து முறையில் எழுதுவதற்கு உதவியது உட்பட அந்நாட்டின் கலாசாரம், இலக்கியத்துக்கு பெரும் பங்காற்றியுள்ளது கத்தோலிக்க திருச்சபை. வெளிநாட்டு மறைப் போதகர்கள் வியட்நாமிய இலக்கியத்துக்கு ஆற்றிய சேவையுடன் 19 மற்றும் 20ம் நூற்றாண்டில் வியட்நாமின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் ஒன்று சேர்வதற்கும் குறிப்பிடத்தக்க தொண்டாற்றியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ அடிப்படை வாதம்

அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணம்
(நவாஜீ)

(சென்ற மாதத் தொடர்....)

### 3. ஆவேசப் போக்கு (1920 முதல்)

இங்கு அடிப்படைவாதிகள் ஆவேசமாகச் செயற்படத் தொடங்கினர். சீர்திருத்தச்சபைகளில் காணப் பட்ட முற்போக்கு சிந்தனைகளைக் களைந்தெடுக்க முன்வந்தனர். இதனால் சீர்திருத்தச் சபைகளுக்கிடையில் பிளவுகள் ஏற்பட்டன. இவ்வகையில் 1929ம் ஆண்டு மாஹான் என்பவர் அடிப்படை வாதிகளுக்கென தனிப் பட்ட இறையியல் கல்லூரியைத் தோற்றுவித்தார். அதன் பின்பு (ஓர்த்தோடொக்ஸ் பிரஸ்பிட்டேமியன் திருச்சபை) எனும் அடிப்படைவாத சபையையும் தோற்றுவித்தார். தன்னுடைய நிலையை நியாயப்படுத்த கிறிஸ்தவமும் முற்போக்கு சிந்தனையும் எனும் நூலை எழுதினார். அதில் பின்வரும் கருத்துக்களை முன்வைத்தார்.

1. மறைக்கோட்பாட்டினை உள்ளவாறு ஏற்கவேண்டுமே தவிர விரும்பியவாறு அவற்றிற்கு விளக்கம் கொடுக் கக்கூடாது.
2. இயேசு மீண்டும் வருவார் புதிய ஆட்சி நிறுவி 1000 ஆண்டு ஆள்வார்.
3. மனிதன் இயல்பிலேயே பாவி. இயேசுவைத் தனது தனிப்பட்ட மீட்பராக ஏற்றுக் கொண்டால்தான் மீட்பு.
4. கடவுள் அனைவருக்கும் தந்தை, பிழையானது. யார் யார் விசுவசித்து ஏற்றுக்கொள்கின்றார்களோ அவர்களுக்கு மட்டுமே அவர் தந்தை. இந்த விசுவசிப் போரையும் அவர் ஏற்கனவே முன்குறித்துள்ளார்.

இக்காலகட்டத்தில்தான் பல புதிய அடிப்படை வாத சபைகள் உருவாக்கப்பட்டன. உறுப்பினர்களின் எண்ணிக்கை பெருகவே தெருப்பிரச்சாரம், வீடு, சந்திப்பு, குணமளிக்கும் கூட்டங்கள், விவிலிய வகுப்புக்கள், போன்ற புதிய யுக்திகள் கைக்கொள்ளப்பட்டன. எண்ணிக் கையைப் பெருக்க சீர்திருத்தச் சபைகள் பிளவு படுத்தப் பட்டன. இதனை நியாயப்படுத்த விவிலிய வார்த்தைகள் பயன்பட்டன. (உரோ 16/17 - 20, 2 கொரி 6/14 - 18, 2 யோவான் 1/7 - 11) மேலும் அடிப்படைவாதிகள் வெறித்தனமாகவும் செயல்பட்டனர். பரினாமக் கொள்கையை எதிர்த்து அரசை தடைச்சட்டம் கொணர வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அது தோல்வியில் முடிய சிறிது காலம் அமைதி ஏற்பட்டது.

### 4. தொடரும் அடிப்படைவாதம் (1930 முதல்)

மீண்டும் தலைத்தெழுந்த அடிப்படைவாதிகள் துரிதமாகச் செயற்படத் தொடங்கினர். இதன் வளர்ச்சி எவ்வளவுக்கென்றால் இரண்டாம் உலகப்போருக்கு பின்பு ஐக்கிய நாடுகள் அவை உருவாக்கப்படுவதைக்கூட அவை எதிர்த்தன. ஆரம்பகாலங்களில் மறைக் கோட் பாடுகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளித்த அடிப் படைவாதிகள் காலப்போக்கில் ஒழுக்கத்திற்கும் முன் னுரிமை அளித்தனர். எனவே பல சபைகளில் புகைப் பிடிப்பது, மது அருந்துவது, போதைப்பொருட்களின் பாவனை போன்றவை தடை செய்யப்பட்டன.

காலம் நகர அடிப்படைவாதிகள் தங்கள் சபை யை வளர்க்க தங்கள் ஊழியர்களை உலகின் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தனர். எனவே 19ம் நூற்றாண்டின் இறுதியில் இவர்கள் அமெரிக்காவிலிருந்து உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவத் தொடங்கினர். 2000ம் ஆண்டின் முடிவில் உலகின் 50% மக்களை யாவது தங்கள் பக்கம் எடுக்க வேண்டுமென்பது இவர் களின் திட்டமாகும்.

### அடிப்படைவாத வரலாறு கூறுவது என்ன?

அங்கு நாம் தேர்ந்து தெரிந்து கொள்ள நன்மைகளும் உண்டு. உதாரணமாக இறைவார்த் தையில் தணியாத தாகம், செபப்பற்று, இன்னும் சில. ஆனால் இவற்றை இவர்களுடைய அடிப்படைவாதப் போக்கு திரையிட்டு மறைத்து வருகின்றது. இதனால் விளைவது நன்மையை விடத்தீமையே.

- இவர்கள் காலத்தின் அறிகுறிகளை ஏற்க மறுத்தவர்கள் (Signs of the time) முற்போக் கிற்கு இடமே கிடையாது. மறுமலர்ச்சி என்பது பாவம்.
- தம் கண்ணிலுள்ள விட்டத்தைப் பார்க்காது அடுத்தவன் கண்ணிலுள்ள துரும்பை நோக்கும் நவீன பரிசேயர்கள் - பிற சபைகளை பழித்து ரைப்பது, தூஷிப்பது இவர்கள் பணி.
- தாங்கள் மட்டுமே இரட்சிப்புக்குரியவர்கள். தாங்களே இரட்சிக்கப்பட்டவர்கள் என்ற மமதை யும், மற்றவர்களைப் பாவிகளாகக் கருதும் எண்ணமும் கொண்டவர்கள்.
- தங்கள் பிழைப்புக்காகப் பல பிரிவுகளை உண் டாக்கி தங்களுக்கென புதிய உறுப்பினர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ப்பது இவர்களது பணி. ஆட்டுப்பட்டிக்குள் நுழைந்து ஆடுகளையே திருடும் கொள்ளையர்கள் என்றாலும் பொருந்தும்.

- கிறிஸ்தவ ஒன்றிப்பு இவர்களுக்கு இனிக்காத ஒன்று. பல திருச்சபைகள் ஒன்று சேர்ந்து கிறிஸ்தவ சபைகளின் உலக மாமன்றம் (World Council of Church) எனும் அமைப்பை தோற்றுவித்த போது அதனை வன்மையாக எதிர்த்தார்கள்.

எ.ஜி.ஷெக்சன் எனும் அடிப்படைவாதி கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிக் கூறும்போது நான் அமைதியை நேசிப் பவர். இதைவிட பிற சபைகளோடு போர் தொடுப்பதை இன்னும் அதிகமாக நேசிக்கிறேன் என்றார்.

- பொதுவுடைமை சித்தாந்தங்களை ஏற்றுக் கொள்ள முடியாத இவர்கள் சமூக மாற்றத்திற்காக மேற் கொள்ளப்படும் அனைத்து திட்டங்களையும் எதிர்க் கின்றனர். ஏழைகளின் இவ்வுலக வாழ்க்கையை மறக்கச் செய்து மறுவுலகை மட்டும் நாடினால் போதும் எனும் போலி மன நிலையை உருவாக்கு கின்றனர்.
- சிக்காகோவில் உலக சமயங்களுக்கு எதிராக எழுப்பப்பட்ட இவர்களின் குரல் உலகில் உரத்து ஒலித்துக் கொண்டேயிருந்தது. பிற சமயங்கள் பொய்யானவை. சாத்தானுக்கு அடிமைப்பட்டவை என்பதை இன்றும் பரப்பிக் கொண்டே உள்ளனர்.

## கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாடு

கத்தோலிக்க திருச்சபையும், ஏன் மரபு வழியே ஏனைய சபைகளும்கூட தம்மை இந்த கிறீஸ்தவ அடிப்படைவாதக் குழுக்களிடமிருந்து அறுத்து பிறிதாகக் காட்டுகின்றது. அதாவது அவர்கள் மத்தியில் காணப் படும் மதம் சார்பான அடிப்படைவாத சிந்தனைகளும் எண்ணங்களும் இல்லையென்றே கூறவேண்டும். இரண் டாம் வத்திக்கானின் ஒளியில் கத்தோலிக்க நெறியினை நாம் நோக்குகின்ற போது திருச்சபையானது தனக்கு ள்ளே ஒரு புதிய மறுமலர்ச்சியை கொண்டுவந்த சம்பவமாக இது நோக்கப்படுகின்றது. 2ம் வத்திக்கான் சங்கத்தின் நோக்கமெல்லாம் விசுவாச உண்மைகளை வரையறை செய்வதோ, தப்பறைகளைக் கண்டனம் செய்வதோ அல்ல, மாறாக பிரிந்த கிறிஸ்தவ சபைகளோடு உறவு ஏற்படுத்துவதும், உலக சமயங்களோடும் எல்லா மக்களோடும் இன்றைய உலகிலும் உரையாடல் ஏற்படுத்துதல் என்கின்ற மேலான கருத்துக்காகவே கட்டப் பட்டது. எனவே இன்றைய உலகோடு உரையாடலில் ஈடுபட்டு திறந்த மனத்தோடு பிற மறைகளையும், பண் பாடுகளையும் அணுகி நீதிக்காக உழைக்கும் மன நிலையை ஊக்குவிப்பதில் 2ம் வத்திக்கான் பொதுசங்கம் இன்றைய திருச்சபைக்கு வழி காட்டியாக அமைகின்றது.

இவ்வாறான சிந்தனையால் தன்னை உரு வாக்கிக் கொள்ள வேண்டிய திருச்சபையானது இன்று உலகில் பரந்துபட்டுக் காணும் கிறிஸ்தவ அடிப்படை வாதத்தின் கூறுகளிலிருந்து தன்னைத்தானே பாது காத்துக் கொள்ள வேண்டியது அதனுடைய முதலாவது பணியாகும். அத்தோடு மட்டும் நின்று விடாது தன்னுடைய உள்ளார்ந்த அர்த்தத்தை நற்செய்தி ஒளியில் அணுகி இன்றைய கிறிஸ்தவ சவால்களை நேர்மையுடனும் நீதியுடனும் அணுகி உலகிற்கு ஒளியாவும் உப்பாகவும் திகழ வேண்டும்.

## முடிவுரை

கிறிஸ்தவ அடிப்படைவாதம் உலகெல்லாம் பரவி மக்களையெல்லாம் தம் பக்கம் தம் மாயக்கவர்ச்சிகளால் கவரும் இக்கால கட்டத்தி-ல் அதனை அணுகுகின்ற அனைத்து மக்களுமே விழிப்பாகவும், விவேகத்துடனும் செயற்பட அழைக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவ அடிப்படைவாதம் எங்கும் தொற்றுநோயாயிற்று. ஒவ்வொருவரும் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ள அழைக்கப் பட்டுள்ளோம். பிறமறைகள், மதங்கள், கலாச்சாரம், பண்பாடுகள், பற்றிய நம்முடைய சிந்தனைகள் பரந்துபட்டதாக இருக்கவேண்டும். குறுகிய சிந்தனைகளுக்கும், நாட்டங்களுக்கும் நாம் என்றுமே இலக்காகிவிடாது எம்விசுவாசம் விரிவு படுத்தப்பட்ட எல்லையாக இருக்க வேண்டும்.

கத்தோலிக்கராக வாழ அழைக்கப்பட்ட நமக்கு வத்திக்கான் சங்கம் எம்முடைய வாழ்வின் அழைத்தலை தூய ஆவிக்குள் மீண்டும் ஒரு தடவை உறுதிசெய்கிறது. அதாவது கத்தோலிக்கராக வாழ அழைக்கப்பட்ட நாம் அனைவருமே எமக்குள் மற்றவர்களைத் தாக்கும் குரோத மனப்பான்மையெல்லாம் அகற்றி கிறிஸ்தவ போதனை பற்றிய தப்பபிப்பிராய போதனைகளைக் களைந்து உண்மை வழியில் எல்லோரையும் ஏற்றுக் கொண்டு வாழ்வதுதான் கிறிஸ்தவ அழைப்பாகும்.


நம் மத்தியில் உலவும் அடிப்படைவாத சபையினரைப் பற்றி நாம் விழிப்பாகச் செயல்பட வேண்டும். இவர்களிடம் எவ்வித உரையாடலோ சமரசப் பேச்சோ வாக்குவாதமோ எடுபடாது. ஏனெனில் இவர்கள் மூடிய அறையில் வாழ்பவர்கள்.

எனவே இக்கருத்துக்கு எதிராகப் போர் தொடுத்து நம் நேரத்தை வீணாக்குவதை விட நமது திருச்சபையில் வத்திக்கானின் புதிய மறுமலர்ச்சி, கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய உரையாடல் ஏற்பட முழுமையான ஈடுபாட்டுடன் உழைக்க வேண்டியது எம் பணி. இருளைப்பழிப்பதை விட ஒளியை ஏற்றுவதே மேல். புதிய பெந்தகோஸ்தே நம்மில் ஒளிரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பொது நிலையினர் மகாநாடு



*அருட்தந்தை எவ்.எக்ஸ்.டயஸ்*
இயக்குனர்
பொதுநிலையினர் ஆணைக்குழு
திருமலை மட் மறைமாவட்டம்.

## பார்வையும் பகிர்வும்

தேசிய பொது நிலையினர் மகாநாடு கண்டி மறைமாவட்டத்திலுள்ள அம்பிட்டியா குருமடத்தில் ஏப்ரல் 12 முதல் 22ம் திகதி வரை நடைபெற்றது. "புத்தாயிரம் ஆண்டிலே தூய ஆவியால் நிரப்பப்பெற்று கிறீஸ்துவின் சாட்சிகளாவோம்" என்னும் தொனிப் பொருளில் நிகழ்ந் தேறியது. இம்மகாநாட்டுக்கு அதி வண. ஆயர் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்கள் (தலைவர், தேசிய மேய்ப் புப்பணி ஆணைக்குழு) தலைமை தாங்கினார். மன்னார், யாழ்ப் பாணம் உட்பட இலங்கையின் அனைத்து மறைமாவட்டங் களிலுமிருந்து 165 பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தார்கள். நமது மறைமாவட்டத்தின் சார்பாக திரு.கே.சிமியோன், திரு.ஜெ. பத்திநாதன் (மட்டக்களப்பு மறைக்கோட்டம்) திருமதி.எம்.ஏ. டபிள்யு, பற்றிக், திரு.டபிள்யூ.ஈ.அருள்நேசன் (கல்முனை மறைக்கோட்டம்) செல்வி.யூபிறேசியா ஜோய் ஒக்கர்ஸ், திரு.ஜெ.எஃப் றொபின், திரு.ஜெ.டபிள்யூ.எம்.பொறம் (திருமலை மறைக்கோட்டம்) ஆகியோர் பங்கு பற்றினார்கள். இவர்களுடன் அருட்பணி ஏ.தேவதாசன், அருட்பணி ஐ.ஜோசப், அருட்பணி எவ்.எக்ஸ். டயஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். அருட்பணி ஜோர்ஜ் திசநாயக்கா மொழி பெயர்ப்பாளராகவும் கடமையாற்றினார்.

முதல் நாள் நிகழ்வுகள் ஒளியேற்றல், ஜெபம் போன்ற இறை சிந்தனைகளோடு ஆரம்பமாகின. தலைவர் அவர்கள் தமது வரவேற்புரையில், "யோசப் வாஸ் அடிகள் பணிசெய்து அடக்கம் செய்யப் பட்டிருக்கும் இந்தக் கண்டி மண்ணிலே இந்த மகாநாடு நடைபெறுவது பொருத்த மானதும் முக்கியத்துவமானது மாகும். ஜூபிலி ஆண்டின் தொடர்ச்சியாக நடைபெறும் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளும் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடை கிறேன்" என்று குறிப்பிட்டார்.

அடுத்து பாப்பரசரின் பிரதிநிதி அவர்களின் உரை நிகழ்ந்தது. தொடர்ந்து, சிங்கப்பூர் மேய்ப்புப்பணி நிலையத்தின் உதவி இயக்குனர் செல்வி.வென்ரி லூயிஸ் (WENDY LOUIS) அவர்கள் பேசுகையில், எமது வாழ்வின் பொருள், இலக்கு, திருச்சபையின் நட்புறவு, எமது பணியும் பங்க ளிப்பும், பெண்கள், ஏழைகள் போன்ற விடயங்களில் சாட்சி களாக விளங்குவது பற்றி எடுத்துக் கூறினார்.

இரண்டாம் நாள் நிகழ்வின் முதலாவது உரையை திரு.விக்டர் சில்வா அவர்கள் "பொதுநிலையினரின் மறை தூதுப் பணியில் இலங்கைத் திருச்சபையும் அது எதிர் நோக்கும் சவால்களும்" என்னும் பொருளில் பேசும்போது, மறைதூதுப் பணி என்றால் என்ன? அது எதற்காக? பணியில் பொதுநிலையினரின் பங்கு, சவால்கள், அழைப்பு போன்ற விடயங்களை எடுத்துக் கூறினார். தொடர்ந்து குழு நிலை யில் கலந்துலையாடல் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் இரண்டாவது உரையைப் "பொது நிலையினரின் ஆன்மீகம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் போது, "திராட்சைச் செடியான கிறீஸ்துவை நோக்கும்போது பொதுநிலையினராகிய நாம் கடவுளுடைய மக்கட் கூட்டத்தில் 99% இருக்கின்றோம், எனவே எமக்கென ஒரு ஆன்மீகத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது" என்று மூவொரு இறைவனையும் திருச் சபையின் ஒன்றிப்பையும் ஆன்மீக அடிப்படையில் வலியு றுத்திப் பேசினார். அடுத்து இவ்விடயம் குழு நிலையில் கலந்துரையாடப்பட்டது.

மூன்றாம் நாள் நிகழ்வின் போது அருட்பணி மில்றோய் பொன்சேகா திருச்சபை ஒன்றிப்பின் மறை பொருள் எனும் தலைப்பில் பேசும்போது, திருச்சபை ஐக்கியத்தின் மறைபொருள், அன்பியம், பங்கேற்கும் திருச்சபை போன்ற வற்றை முதன்மைப்படுத்திப் பேசினார். இதனைத் தொடர்ந்து குழு நிலையில் கலந்துரையாடல் நடைபெற்றது. மதிய உணவு இடைவேளைக்குப் பின், மறைமாவட்டத்தின் அடிப்படையில் குழுக் கலந்துரையாடல் நடைபெற்றது. இவற்றின் முடிவில் மறைமாவட்டத் திட்டங்கள் உருவாக் கப்பட்டன. இறுதி நாள் காலையில் நடைபெற்ற பொது அமர்வில் இவை சமர்ப்பிக்கப்பட்டு பின்வரும் விடயங்கள் அடங்கிய பொது அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கு தருகிறேன்.

1) விவிலியத்தின் ஆரம்ப, தொடர் அறிவு பொது நிலை யினருக்கு வழங்கப்படல் வேண்டும்.
2) பொதுநிலையினரின் ஆன்மீகம் குடும்பத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொழில் செய்யும் இடங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும்.

3) சமாதானம், ஒப்புரவு பற்றிய உடனடியான, துணிச்சலான முடிவுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.
4) அன்பியங்களின் செயற்பாடுகளை மறைமாவட்டங்கள் தோறும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.
5) பொதுநிலையினருக்கும் குருமாருக்குமான இடைவெளி குறைக்கப்பட வேண்டும்.
6) பொதுநிலையினர் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும்.
7) பொதுநிலையினர் வீடுகளிலும் பாடசாலைகளிலும் செயல்பட பயிற்சி நிலையங்கள் ஆரம் பிக்க வேண்டும்.
8) 1995ல் நடைபெற்ற தேசிய மகாநாட்டுத்தீர்மானங்கள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவையாவும் ஆயர் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தேசிய, மறை மாவட்ட ரீதியில் நடைமுறைக்கு வரும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இத்துடன் இம்மகாநாடு நிறை வெய்தியது. இவ்வேளையில் பொதுநிலை இயக்குனராகிய நான் பலருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். உரைகளை தமிழில் மொழி பெயர்ப்பு செய்து தந்த அருட்பணி ஜோர்ஜ் ஜீவராஜ், அருட்பணி ஏ.ஏ.நவரெட்ணம், அருட்பணி டி.சாமிநாதன், அருட்பணி அன்ரனி ஜெயராஜ், அருட்பணி றொபின்சன் போல், அருட்சகோதரர் யூலியன் (தேசிய குருமடம்) திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி பற்றிக், அருட்சகோதரி சாந்தி ஆகியோருக்கு நன்றி நவில்கின்றேன்.

மகாநாட்டில் பங்குகொண்ட சிலரிடம் மகாநாடு தொடர்பான அபிப்பிராயங்களை வினவினோம்.

அவர்களில் ஒரு சிலர் கூறிய கருத்துக்களை மிகவும் சுருக்கமாக கொடுக்க விரும்புகிறேன்.

**1. றேய்மன்ட் ஞானப்பிரகாசம்** கண்டி மறைமாவட்டம்.

இது நல்ல மகாநாடு. இது பயனுள்ள மகாநாடு. தேசிய மட்டத்தில் பல கருத்துக்கள் பரிமாறப்பட்டு மறை மாவட்டங்களில் பல நட வடிக்கைகள் முன்னெடுக்க இது உதவி செய்துள்ளது.

• • • •

**2. அருட்பணி டலிமா** மன்னார் மறைமாவட்டம்.

இதில் பொதுநிலையினரின் பங்கு கூடுதலாக இருந்தது. பொதுநிலையினர் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றினார்கள். பொதுநிலையினருக்கு பயிற்சிகள் முக்கியம். உரைகளை சிறிதாக்கி கலந்துரையாடலுக்கான நேரத்தைக் கூட்டியிருக்கலாம். இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

• • • •

**3. திரு. மாட்டின் பயஸ்.** மன்னார் மறைமாவட்டம்

புத்தாயிரம் ஆண்டில் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய நல்ல முயற்சியாக இது எனக்குப்படுகிறது. மகாநாட்டில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மறைமாவட்டத்தில் எடுத்துச் சொல்லப்படுமானால் பொதுநிலையினர் கூடிய ஈடுபாடுகொள்ள சாத்தியம் இருக்கிறது. இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. எதிர்பார்ப்புக்கு மேலாக நடைபெற்றது.

• • • •

**4. திருமதி யேசு மரியான்** பதுளை மறைமாவட்டம்

இது மிகவும் பிரயோசமானது. பொதுநிலையினர் பணியைப் பற்றி அறிந்து கொண்டேன். கஷ்டமான பிரதேசங்களில் திருச்சபையை வளர்க்க பொதுநிலையினர் எவ்வளவு பாடுபடுகிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன்.

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. அருட்பணி மரிய அன்ரனி** (யே.ச.)

இம்மகாநாடு கூட்டப் பட்டது வரவேற்கத்தக்கது. இங்கு அவதானிக்கக் கூடியது என்ன வென்றால் பொது நிலையினர் சுதந் திரமாக செயற்படுகிறார்களா என்ற ஒரு கேள்வி வருகிறது. எல்லாவற் றையும் குருக்களிடமும் துறவி களிடமும் கேட்டுக் கொள்கிறார்கள். துறவிகள், குருக்கள் அவர்களுக்கு உதவியாளர்களாக இருக்கலாம்.



ஜெபம் முக்கியமானது இங்கு நடத்தப்பட்ட ஜெபம் ஒரு குருமட பாணியிலும் துறவிகள் செய்யும் பாணியிலும் நடைபெற்றது. பொதுநிலையினருக்கு ஏற்றபடி நடக்கவில்லை. இப்படி ஒரு மகாநாடு மூன்று வருடத்திற்கு ஒரு முறை நடைபெற வேண்டும். நன்றாக ஆயத்தம் செய்யப்பட வேண்டும். நாட்டின் பிரச்சனைகள் ஆராயப்பட வேண்டும்.

**6. திரு. பேர்னான்டோ பிரான்சிஸ்** யாழ் மறைமாவட்டம்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். இலங்கையில் உள்ள பல பொது நிலையினரை சந்திக்க உதவியாக இருந்தது.

**7. அருட்சகோ. யோசப் ஜெயகாந்தன்.**

பணிகளை பின்நோக்கிப் பார்க்க சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. இம்மகாநாடு முன்னேற்றத்துக்கு வலிகோ லமா என்பது கேள்விக்குறி. உரைகள் நீண்ட உரைகளாக இருந்தன. சிந்திப்பதற்கு ஏற்ற விதமாக உரைகள் கொடுக் கப்படவில்லை. உரைகள் அறிவு ரீதியாக இருந்தன. தயாரிப்புப் போதாது. இளைஞர்கள் பங்குபற்றவில்லை. இம் மகாநாடு ஒரு சிறிய ஆரம்பம்.

> நல்ல காரியங்கள், பிறருக்கு உதவுகிற சம்பவங்கள் பல வழிகளிலும் நம்மை அறியாது நாம் எதிர்பார்க்காத போது நமக்குத் தெரியாமல் நமக்கு உதவிக் கொண் டிருக்கின்றன.

**8. அருட்பணி மானல் சேனநாயக்கா**

அனுராதபுரம் மறைமாவட்டம்.

நிறைய அனுபவம் கிடைத்தது. அன்பியங்கள் எல்லா மறைமாவட்டங்களிலும் இருப்பது மிகவும்வரவேற்கக் கூடியதாக உள்ளது. இதைப் பற்றி பலர் கூறினார்கள்.

**9. திரு. ஜோ. பத்திநாதன்**

மட்டக்களப்பு மறைக் கோட்டப் பேரவைச் செயலாளர்

“தேசிய பொதுநிலையினர் மகாநாடு” 1995ம் ஆண்டிற்குப் பின் இம்மகாநாடு 2001ல் கூட்டப்பட்டதாக அறிந்தேன். இது நீண்ட இடைவெளி எனக் கருதுகின்றேன். முன்யோச னையுடன் திட்டமிட்ட முறையில் நிகழ்வுகள் நடைபெற்றன. பணிக் குருத்துவத்தாருக்கு சரி நிகராக பொதுக் குருத்து வத்தாரும் ஆய்வுரைகளைச் சமர்ப்பித்து உரையாற்றியது மெச்சத்தக்கதாக இருந்தது. மறைமாவட்டங்களின் கத்தோலி க்கர்களது தொகைக்கு ஏற்ப மகாநாட்டில் கலந்துகொள்ள பிரதிநிதி தெரிவு செய்யப்படும் முறை மீள் பரிசீலனை செய்யப்படுதல் மூலம் குறைவான கத்தோலிக்கர்கள் உள்ள மறைமா வட்டங்களில் அதிகமான நற்செய்தியறிவிப்பை மேற்கொள்ள வழிகிடைக்கும் என்பது எனது சொந்த அபிப்பிராயமாகும்.

> **அளவுக்கு மிஞ்சி உண்பவன் நோய்க்கு ஆளாகிறான் அளவுக்கு மிஞ்சி போதிப்பவனும் அப்படியே தன்னை அழித்துக்கொள்கிறான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் பக்கம்

## க. பொ. த. (சாதாரணம்) கத்தோலிக்கம்

**10ம் பாடம்**

இறைவார்த்தையைக் கேட்போம்

"கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது; ஆற்றல் வாய்ந்தது; இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது; உள்ளத்தின் சிந்தனைகளையும், நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது."

(எபிரேயர் 4:12)

இறைவார்த்தையைத் திருவிவிலியத்தின் வழியாகக் கற்றறிந்து தமது வாழ்வை மாற்றியமைத்துக் கொண்ட ஆயிரமாயிரம் பேரைப்பற்றி நாமறிந்துள்ளோம்.

### புனித நூல் திருவிலியம்

- கிறிஸ்தவரின் புனித நூல் திருவிவிலியமாகும்.
- "பைபிள்" எனும் சொல் "பிபிளுஸ்" அல்லது "பிபிலியோன்" எனும் கிரேக்க மொழியிலிருந்து உருவாகியது. அதன் பொருள் புத்தகம் என்பது.
- திருவிவிலியம் ஒரு புத்தகம் அல்ல. அது ஒரு நூலகம் .
- திருவிவிலியத்தில் 73 புத்தகங்கள் அடங்கியுள்ளன. கி.மு.950-கி.பி100ம் ஆண்டு வரை பல எழுத்தாளரால் எழுதப்பட்டுள்ளன.
- திருவிவிலியத்தில் இஸ்ரயேல் மக்கள் இறைவனின் அன்பையறிந்து உணர்ந்து கொண்டவிதமும், அதற்கீடாக அவர்கள் காட்டிய பிரதியன்பும் பற்றிய விளக்கமும் அடங்கியுள்ளது.
- திருவிவிலியம் பழைய ஏற்பாடு, புதியஏற்பாடு என இரு பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பழைய ஏற்பாடு அதிகமாக எபிரேய மொழியில் எழுதப்பட்டுள்ளது. சில பகுதிகள் அரமயிக் மொழியில் எழுதப்பட்டுள்ளன.
- பழைய ஏற்பாடு இறைவன் இஸ்ரயேலருடன் செய்த உடன்படிக்கை. புதிய எற்பாடு இறைவன் தம் திருமகன் மூலம் முழு மனித சமுதாயத்துடனும் செய்த உடன்படிக்கை.
- இறையருளால் எழுதப்பட்ட திருவிவிலயத்தை வாசிப்பதன் மூலம், இறைவனைக் காணமுடியுமெனத் திருச்சபை நமக்குக் காட்டுகிறது.
- 2ம் வத்திக்கான் சங்க வெளியீடு இதுபற்றிக் கூறுகின்றது.
- தொடக்கநூல் மனிதன் இறைவனிடமிருந்து உயிர் பெற்றமையையும், சகல படைப்புப் பற்றியும் அறியச் செய்கிறது.
- பழைய ஏற்பாட்டில் 46 நூல்களும், புதிய ஏற்பாட்டில் 27 நூல்களுமுள. மக்கள் பெற்ற அனுபவம் இதில் காணப்படுகிறது.
- தூய ஆவியாரின் ஏவுதலால் எழுதப்பட்டது. (2திமோத்தேயு 3: 16-17)
- திருவிவிலியத்தில் இறையருள் பேச்சு,செயல்,எழுத்து என்ற 3 வித்ததில் செயலாற்றியுள்ளதை அறிகிறோம்.

### திருவிவிலிய ஆசிரியரும் அதன் நோக்கமும்

- திருவிவிலிய ஆசிரியர் இறைவன் ஆவார்.
- அவர் மனிதருக்கு வெளிப்படுத்த விரும்பியவற்றை மட்டுமே, அது அடக்கியிருப்பதால், ஆக்குநரும் அவரே.
- திருவிவிலயத்தின் உதவியாசிரியர் மனிதர், நூல்களனைத்தும் சாதாரண மனிதரால் எழுதப்பட்டவை.
- இறைவனின் வழிநடத்துதலால் இறை வெளிப்பாட்டை எழுதும் போது தனது திறமைகளை மனிதன் பயன் படுத்தினான்.
- அத்துடன் அன்றைய சமுதாயக் கதைகள், புராணங்கள், சமயக்கதைகள், சமயப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் இவற்றை எழுதுகையில் உபயோகப்படுத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறை ஏவுதலால் மனிதன் பலவித அடிப்படைக் கருத்துக்களை மனதிற்கொண்டு திருவிவிலியத்தை எழுதினாலும், நோக்கம் இறையாட்சி ஒன்றே.

## திருவிவிலிய நூல்கள்

- மொத்தம் 73 நூல்கள் கொண்டது திருவிவிலியம். எபிரேயப் பிரதியின்படி பழைய ஏற்பாட்டில் 39 நூல்களுள்ளன. கிறிஸ்தவ விவிலியத்தில் பழைய ஏற்பாடு எபிரேயப் பிரதியின் உள்ளடக்கமாகும்.
- பரிசுத்த வேதாகமம் கிரேக்கப்பிரதி "செப்துவாஜின்" என அழைக்கப்படும். அதன் பொருள் 72 என்பது. 72ஆசிரியர்கள் கிரேக்க மொழிப்பிரதியை மொழி பெயர்த்ததனால் "செப்துவாஜின்" பிரதி எனப்பட்டது.
- புதிய ஏற்பாட்டு நூல்கள் வரலாற்றுநூல்கள், சுற்றுமடல்கள் இறைவாக்கு நூல்கள் என மூன்று வகைப்படும்.

## இறைவார்த்தையும் இயேசுவும்

- யூதமக்கள் இறைவார்த்தையைத் தம் உயிரினும் மேலாக மதித்தனர். இயேசுவும் அவ்வாறே மதித்தார். "தோரா" எனப்படும் இறைவார்த்தை அடங்கிய நூல்களைத் தம் அன்றாட வாழ்வில் பின்பற்றி நடந்தார். (மத்தேயு 5:19)
- இயேசு திரு விவிலியத்தில் ஆழமான அறிவைக் கொண்டிருந்ததால், அலகை சோதித்த மூன்று தடவைகளிலும் இணைச்சட்ட வசனங்களையே எடுத்துக்காட்டினார்.
- அனைத்துச் சந்தர்பங்களிலும் திருவிவிலியத்தை அவர் யன்படுத்தினார்.

## திருவிவிலியத்தில் விசவாச வாழ்வு

- இஸ்ரயேல் மக்களின் ஒரே விசுவாசம், ஒரே இறைவனை வழிபடுவதே (விடுதலைப்பயணம் 20:3) உண்மையான விசுவாச வாழ்வென்பது அன்புடன்
- எமை அழைக்கும் இறைவனுக்கு அன்பினால் விடையளிப்பதாகும்.
- திருவிவிலியம் எமது வாழ்வைப் பூரணப் படுத்து வதற்காக வழி நடத்திச் செல்லும் ஞான ஊற்றாகும் என நாம் உணர வேண்டும்.

எல்லாம் அவனால்தான் முடியுமென்று பிராத் திக்க வேண்டும் அதேசமயம் எல்லாம் நம் செயலில்தான் இருக்கிறது என்று செயல்பட வேண்டும்.

---

நல்ல காரியங்கள், பிறருக்கு உதவுகிற சம்ப வங்கள் பல வழிகளிலும் நம்மை அறியாது நாம் எதிர் பார்க்காத போது நமக்குத் தெரியாமல் நமக்கு உதவிக் கொண்டிருக்கின்றன.

---

# எழுத்துலக மேதை!

தமிழகம் தந்த எழுத்துலக மேதை 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி 'அந்தக் கால எழுத்தாளர்' என்று எந்தக் காலத்திலும் ஒதுக்கிவிட முடியாத, தொடர்ந்து அடுத்தடுத்த தலைமுறை வாசகர்களை ஈர்க்கும் சக்தி படைத்தது கல்கியின் எழுத்துக்கள் அவரது சொல் லாட்சி அற்புதமானது. அவரது நாடிநரம்புகளுடன் கலந்துவிட்ட தமிழ், அவர் சொல்படி எல்லாம் கேட்டது. அவர் நகைச்சுவை எழுத்தினால், தமிழர்கள் சிரித்து மகிழ்ந்தார்கள். விமரிசனங்களில் கலைஞர்களை அவர் தட்டிக்கொடுத்தபோதும் குறைகளைச் சுட்டிக் காட்டியபோதும் கலைஞர்கள் வளர்ந்தார்கள். கலையும் வளர்ந்தது. அரசியல் எழுதும்போதும் கருத்துக்களின் வேகத்தால் எதிர்தரப்பு வாதங்கள் வளைந்தன. அவரது கற்பனைத்திறன்மிக்க சரித்திர நாவல்களில் பாமரர்களும் புரிந்துகொண்ட ஒரு தனித்தமிழ் கொஞ்சியது. அவரு டைய கவிதைகளோ, நெஞ்சை உருக வைத்தது.

தமது எழுத்தாற்றலை பல துறைகளிலும் பாய்ச்சி, விந்தைகளைச் செய்தவர் கல்கி. மகாகவி பாரதியைப் போல தமிழ்மொழியை செழிக்கச் செய்தவர் அவர் என்பதில் சந்தேகமே இல்லை!

தமிழ் உள்ளவரை கல்கியின் எழுத்துக்கள் தமிழர் உள்ளங்களில் செங்கோலோச்சும் என்பது நிச்சயம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர்ந்த புண்ணியவான்களே!

அருள் மணி

புலம் பெயர்ந்த புண்ணியவான்களே!
உங்கள் சொந்த வீட்டில்
அட்டூழியங்கள் நடக்கும்போது
தூரத்தே ஓடிச் சென்று
யாரோ மூன்றாம் மனிதரைப்போல்
கண்ணீர் சிந்துகின்றீர்கள்

கவிதை பாடுகின்றீர்கள்
கதை எழுதுகிறீர்கள்
கட்டுரை எழுதுகிறீர்கள்
ஒரு கணம்
உங்கள் நெஞ்சைத் தொட்டுப் பாருங்கள்
அடிபடுபவர்கள்
உங்கள் சொந்த சகோதரர்கள்
உங்கள் தாய் தந்தையர்
பாட்டன் பாட்டிகள்
நீங்களோ
இவர்களை நட்டாற்றில் விட்டு விட்டு
உங்கள் சுகவாழ்வு நாடி ஓடினீர்கள்
இப்போது
கதை அளக்கிறீர்கள்
சொந்தச் சகோதரர்கள்
துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்காத
திருக்கூட்டம் நீங்கள்!

எரிகிற வீட்டில்
பிடுங்கியது ஆதாயம் என்பதுபோல்
வாரிச்சுருட்டிக்கொண்டு
ஓடினீர்களே!
அடிபட்டுச் சாகும் எங்களையே
காரணம் காட்டி
அயல் நாடுகளுக்கு ஓடினீர்களே
ஒரு துரும்பும் உங்கள் மேல் படாமலே!

எரிகிற இந்த வீட்டில்
எண்ணை ஊற்றுகிறார்கள்
இரக்கமில்லாத அரக்கர்கள்
மனிதத்தைப் புதைத்துவிட்டு
மாய்மாலம் செய்கிறார்கள்
வருஷக் கணக்காய் சமாதானம்
பேசிப் பேசியே வயிறு
வளர்க்கிறார்கள்
வெள்ளைப் புறாவும் வெண்தாமரையும்
காட்டி வெளிச்சம் போடுகிறார்கள்
நாளொரு வண்ணம்
பொழுதொருமேனி
செம்மணிகளும், கிருஷாந்திக்
கூட்டமும்
நிறைகின்றன
அதைக் கொஞ்சமும் நிறுத்தாமல்
பேச்சு வார்த்தை பேச்சு வார்த்தை
எனப்
பேசித் தீர்க்கிறார்கள்
இவர்களுக்கும் உங்களுக்கும்
என்ன வித்தியாசம்?
அடிபட்டீர்களா? அகதியானீர்களா?
அகதிமுகாமைக் கனவிலேனும்
கண்டீர்களா?
உயிர்த்தியாகம் செய்தீர்களா?
உள்ளே இருந்தீர்களா?
யாருக்குக் காது குத்துகிறீர்கள்
இன்று நீங்கள்
புலம் பெயர் கலாசாரம் பேசுகிறீர்கள்
நாளை உங்கள் முகவரிகளே
இருக்காது
கடலில் கரைத்த புளியாக
உங்கள் சந்ததி கரைந்துபோகும்
ஆனால் நாங்கள் இருப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35வது உலகத் தொடர்பு தினம் (மே 27. 2001)

## உலகளாவிய தொடர்பு யுகத்தில் நற்செய்தியை கூரை மேலிருந்து அறிவியுங்கள்.

திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர்

இன்றைய உலகில் கூரைகள், உலகின் நான்கு திசைகளிலிருந்தும் பலதரப்பட்ட செய்திகளை அனுப்புவதும் பெற்றுக்கொள்வதுமாக ஒலிபரப்புக் கருவிகள், வானலை வாங்கிகள் நிறைந்த காடாகக் காட்சியளிக்கின்றது. இந்த எண்ணற்ற செய்திகளுக்கிடையில் இறைவார்த்தையும் கேட்கப்படுவதை உறுதிப்படுத்துவது மிக முக்கியமாகும். கூரைமீதிருந்து விசுவாசத்தை அறிக்கையிடுவதென்பது இன்று உயிரூட்டம் நிறைந்த தொடர்பு சாதனங்களூடாக உலகில் இயேசுவின் வார்த்தையை அறிவிப்பதாகும்.

இவ்வாறு மே மாதம் 27ம் திகதி அனுசரிக்கப்பட்ட உலகத் தொடர்பு தினத்தை ஒட்டி வெளியிட்ட செய்தியில் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அச்செய்தியில்

இயேசுக்கிறீஸ்து தாமே மனிதனுக்கு அவனையே முழுமையாக வெளிப்படுத்தி அவனது உயர்ந்த அழைப்பை உணர்த்துகிறார். எனவே கிறீஸ்தவர்களின் குரல் ஒருபோதும் மௌனமாயிருக்க முடியாது. ஏனெனில் ஒவ்வொரு மனித உள்ளமும் ஏக்கத்துடன் காத்திருக்கும் மீட்புச் செய்தியை ஆண்டவர் எம்மிடம் ஒப்படைத்துள்ளார். நாம் ஒவ்வொருவரும் தேடிக்கொண்டிருக்கும்விலையுயர்ந்த முத்தை நற்செய்தி எமக்கு அளிக்கிறது. (மத் . 13:45 - 46)

இன்னும் தொடர்பு சாதன உலகம் சில வேளைகளில் கிறிஸ்தவ செய்திக்கு முரண்பட்டதாகத் தோன்றினாலும், கிறிஸ்துவினது மீட்பின் உண்மையை மனிதகுலம் முழுவதற்கும் அறிவிப்பதற்கு அது இணையற்ற வாய்ப்புகளை அளிக்கின்றது. ஆகவே எமது காலத்தில் தேவைப்படுவது என்னவெனில் திருச்சபையானது செயல்திறனுடன் பயன்படுத்துவதாகும். கிறிஸ்துவின் நற்செய்தியை உலகெங்கும் கூரைகளின் மேலிருந்து கேட்கக் கூடியதாக கிறிஸ்துவுக்கு சமூகத் தொடர்பு சாதனங்களின் கதவை அகலத் திறந்துவிடக் கத்தோலிக்கர் அஞ்சக்கூடாது. உண்மையில் சகலவிதமான தொடர்பு சாதனங்களும் நேரடியான நற்செய்திப் பணியிலும் மனித மகத்துவத்தை ஆதரித்து மேம்படுத்துகின்ற உண்மைகளையும் மதிப்பீடுகளையும் மக்களுக்குக் கொண்டு வருவதிலும் ஒரு சிறப்பான பங்கை வகிக்க முடியும். உலகெங்கும் தூய ஆவியானவர் திருச்சபையைப் புதிய நற்செய்திப் பணிக்கு அழைத்துக் கொண்டிருக்கிறார். தொடர்பு சாதனங்களில் திருச்சபையின் பிரசன்னம் உண்மையில் இப்புதிய நற்செய்திப் பணிக்கு வேண்டப்படும் நற்செய்தியை பண்பாட்டு மயமாக்குவதில் ஒரு முக்கிய அம்சமாக இருக்கின்றது.

திருச்சபை முழுவதும் தூய ஆவியின் அழைப்பை செவிமடுக்க முயலும்போது கிறிஸ்தவ தொடர்பாளர்களுக்கு ஓர் இறைவாக்குப்பணி - இன்றைய பொய்த் தெய்வங்களான உலகாயதம், இன்பவேட்கை, குறுகிய தேசியவாதம் ஆகியவற்றை எதிர்த்துக் குரல் கொடுக்கும் அழைத்தல் உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக மனுவுரு வெடுத்த வார்த்தையானவரில் வெளிப்படுத்தப்பட்ட மனித வாழ்வைப்பற்றிய உன்னத உண்மையை எடுத்துக்கூறும் கடமையும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. சமூகத்தொடர்பு சாதன உலகில் ஈடுபட்டுள்ள கத்தோலிக்க மக்கள் கூரை மேலிருந்து இயேசுவின் உண்மையை துணிச்சலுடனும் மகிழ்ச்சியுடனும் எடுத்துரைப்பார்களாக. இன்றும் நேற்றும் என்றும் மாறாதிருக்கும் இயேசுக் கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்தும் இறைவனது அன்பைப்பற்றி எல்லா மக்களும் கேட்டுணரும் பொருட்டு அதனை எடுத்துரைப்பார்களாக.

## கல்முனையில் உலகத் தொடர்பு விழா -2001

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடாத்தும் உலகத் தொடர்பு தின விழா எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 05ம் திகதி கல்முனையில் நடைபெறவுள்ளது.

### இவ்விழாவில் சிறப்பு நிகழ்வுகளாக

- தொண்டன் சிறப்பு மலர் வெளியீடு
- பரிசளிப்பு
- கலைஞர் கௌரவம்
- கலை நிகழ்ச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவை வளர்ப்போம் - 08 முடிவுகள்

விடைகள்

1) மக்கா
2) காரைதீவு
3) கொழும்பு
4) 43வது ஜனாதிபதி
5) மில்லி மீற்றர் (m.m.)
6) செல்லத்துரை ஜெயராஜா

### 50/- பரிசு பெறுவோர்

1) டிரிக் பாத்திலட்
66/1, செபஸ்தியார் வீதி,
மட்டக்களப்பு.

2) அ. தர்ஷனா
பிரதான வீதி,
தேற்றாத்தீவு - 01,
தேற்றாத்தீவு.

3) ஜே. கே. மெடோனா ஜெமினி
126, வட்டவிதான வீதி,
கல்முனை - 02.

4) குணபால் சந்திரிக்கா பிரியங்கனி
பெத்லகேம்,
லூர்து அன்னை வீதி,
பாலையூற்று,
திருகோணமலை.

5) ஞா. அன்ரனி பிரசாந்
ஆலய வீதி,
மூதூர் - 03,
மூதூர்.

## விவிலியம் கற்போம் - 08 முடிவுகள்

விடைகள்

1) கானான்
2) 17 வயது
3) செக்கேம்
4) ரூபன்
5) எகிப்து

### 50/- பரிசு பெறுவோர்

1) ப. ஷாய் சாதனி
81/2 சுங்க வீதி,
திருகோணமலை.

2) எவ். நீல் நிஷாந்
45/7, 2ம் குறுக்கு வீதி,
சின்ன உப்போடை
மட்டக்களப்பு.

3) கே. பி. சந்திரமோகன்
குபுக்கனத் தோட்டம்,
குபுக்கன, மொனராகலை.

4) கொன்சால் றொக்கேஷன் டயஸ்
வட்டாரம் - 07,
ஜூட் வீதி,
பேசாலை, மன்னார்.

5) ஆர். அஞ்சலின் நிஷாந்தி,
C/O திருமதி ஆர்.ரவி,
கிட்டங்கி வீதி,
மணல்சேனை, கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Registered as a News Paper in Sri Lanka.*

காற்றில் கலந்து வரும்...

# கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள் - தமிழ்

## ஜூன் - 2001

❑ **கத்தோலிக்க நற்சிந்தனை** – நேரம் : காலை 5.50 மணி

நாள் : 02, 03, 04, 05

வழங்குபவர் : திரு. ஸ்ரான்லி பிரபாகரன்

நாள் : 06, 07, 08,

வழங்குபவர் : அருள் தந்தை இக்னேஸ்ஜோசப்

நாள் : 16, 17, 18, 19

வழங்குபவர் : திரு. செல்லத்துரை ஜெயராஜா

நாள் : 20, 21, 22

வழங்குபவர் : அருள் தந்தை C.V. அன்னதாஸ்

❑ **சிறுவர் உலகம் (கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி)** – நேரம் : மாலை 7.45 மணி

நாள் : 12

✳ **திருமறை வினாடி வினாப் போட்டி**

தயாரிப்பு : சங்கரி

நாள் : 26

✳ **பல்சுவை அம்சங்கள்**

❑ **புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி)** - நேரம் : மாலை 7.00 மணி

நாள் : 10, 24

✳ **உரை, செய்திகள், போட்டிகள், கவிதை, நாடகம் இன்னும் பல...**

நிகழ்ச்சித் தொகுப்பு : **மலர்வேந்தன்**

தொடர்பு : **சமூகத் தொடர்பு நிலையம்**
**அ.பெ.எண் - 44**
**மட்டக்களப்பு**

St. Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Designing - St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org